
திகில் & திரில்
ரூ.10
உதடுகள் சுடும்
துப்பறியும் ஜாம்பவான்
ராஜேஷ்குமார்

# 1

டெல்லி விமான நிலையம். விடியற்காலை நேரம். விமானநிலையத்தின் எலக்ட்ரானிக் கடிகாரம் 5-15 என்று சிவப்பாய் நேரத்தைக் காட்டிக்கொண்டிருக்க - சொற்பமாய் சிலபேர் சென்னையிலிருந்து வரப்போகும் விமானத்திற்காக காத்துக்கொண்டிருந்தார்கள். இரண்டொருவரின் கைகளில் ரோஜா மாலைகள். பதவியிழந்த ஒரு அரசியல் கட்சித்தலைவரை வரவேற்க - கட்சிக் கொடிகளோடும் - பேனர்களோடும் ஏழெட்டுப் பேர் நின்றிருந்தார்கள். டெல்லி பனியில் தொலைதூரக் கட்டிடங்கள் பாலித்தீன் பேப்பரால் சுற்றப்பட்ட மாதிரி தெரிந்தது. ரன்வேயின் இரண்டு பாதைகளிலும் நடவு செய்யப்பட்டிருந்த சிவப்பு விளக்குகள் - கறுப்புத் துணியில் கோர்த்த பவளங்களாய் ஒளிர்ந்தது.

நகுல் கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே விமான நிலையத்திற்குள் நுழைந்தான். இருபத்தேழு வயது. கரும்பச்சையில் சபாரி அணிந்து - கழுத்து உயர்தர மப்ளர் துணியை சுற்றியிருந்தான். கண்களில் மெலிதான குளிர்கண்ணாடி தொற்றியிருந்தது.

மெல்ல நடந்து - விசாரணை கவுண்டரை நெருங்கி. இடதுபுறங்கை விரல்களால் லிப்ஸ்டிக் பூசிய உதடுகளை மூடி கொட்டாவியை அடக்க முயன்று கொண்டிருந்த வரவேற்பு பெண்ணிடம் கேட்டான்.

"மேடம்...சென்னை விமானம் எத்தனை மணிக்கு



வரும்?"

"ஐந்து நாற்பது..."

"விமானம் தாமதமில்லையே...?"

"இல்லை..."

"ஐந்து நாற்பதுக்கு இங்கே வரும் விமானம்... மறுபடியும் கல்கத்தாவுக்கு எத்தனை மணிக்கு போகும்...?"

"ஒரு மணி நேரம் கழித்து..."

"நன்றி...

நகுல் விசாரணைக் கவுண்டரைவிட்டு நகர்ந்து பக்கத்திலிருந்த கேண்டீனுக்கு போய் வந்து. ரூபாயை கொடுத்து அட்டை தம்ளரில் காப்பியை வாங்கிக் குடித்துக் கொண்டே - நேற்றைக்கு இரவு தனக்கு வந்த தந்தியை மறுபடியும் சட்டைப்பாக்கெட்டிலிருந்து எடுத்துப் பார்த்தான்.

'நகுல்! சென்னை - டெல்லி விமானத்தில் நாளை விடியற்காலை வருகிறேன். அவசியம் என்னை வந்து சந்திக்கவும். விசயம் ரொம்பவும் முக்கியம். தவறாமல் வரவும் - சாம்பமூர்த்தி.'

நகுல் காப்பியை சப்பிக்கொண்டே யோசித்தான். 'விசயம் என்னவாக இருக்கும்...? ஒரு மூன்று மாத காலத்திற்கு எந்த வகையிலும் என்னை தொடர்பு கொள்ள வேண்டாமென்று பத்து நாட்களுக்கு முன்புதானே... சாம்பமூர்த்தி கடிதம் போட்டிருந்தான்...'

'இப்போது அந்த கண்டிசனை அவனே உடைத்திருக்கிறான்.'

'டெல்லிக்கு வருகிறவன் ... உடனே... அதே விமானத்தில் புறப்பட்டு கல்கத்தாவுக்கு போகிறான்... எதற்காக இந்த திடீர் பயணங்கள்...?'

காப்பி காலியாக - அட்டை தம்ளரை கசக்கி பிளாஸ்டிக் குப்பைக் கூடையில் எறிந்து விட்டு சிகரெட் ஒன்றை பற்றவைத்துக் கொண்டான்.

முதல் புகையை வெளியிட்ட விநாடி-

அவன் தோளை யாரோ தொட்டார்கள்.

புகை கசியும் வாயோடு திரும்பினான்.

ஒரு இளைஞன் நின்றிருந்தான். முகம் பரிச்சையமான மாதிரி இருந்தது. 'இவனை எங்கேயோ பார்த்திருக்கிறோம்...?' "டேய் நகுல் ... என்னடா பார்க்கிறே...? என்னை தெரியலை..."

"நீ...நீ...நீ...?"

"சொல்லு பார்ககலாம்..."

"நீ... வின்சென்ட்தானே...?"

"அப்பாடி...! கண்டுபிடிச்சிட்டே...! ஏன்டா ஒரு ஏழெட்டு வருடம் பார்க்காமல் இருந்தால் இப்படியா மறந்து போயிடறது...?"

"சாரிடா... பள்ளிக்கூடத்தில படிச்சப்ப ஒண்ணா பழகிட்டிருந்தோம்... ஆள் அப்ப இருந்ததுக்கும் இப்ப இருக்கிறதுக்கும் நிறைய வித்தியாசம் தெரியுது.



தொப்பை வேற போட்டுட்டே... மூஞ்சிபூராவும் கன்னாபின்னான்னு சதை பிடிச்சிருக்கு..."

"ஆமா என்ன இந்த நேரத்தில... விமான நிலையத்துக்கு..."

"நண்பர் ஒருத்தர் சென்னையிலிருந்து வர்றார்... அவரை பார்க்கத்தான் காத்திட்டிருக்கேன்...! நீ...?"

"நான் கல்கத்தாவுக்கு பயணம் என் மனைவியோடு..."

"அட... உனக்கு கல்யாணமும் முடிஞ்சாச்சா...?"

"போன டிசம்பரில்தான் ஆச்சு..."

"எங்கே மனைவியைக் காணோம்...?"

"தோழி ஒருத்தியோடு பேசறதுக்காக... டெலிபோன் பூத்துல நுழைஞ்சிருக்கா... எப்படியும் பேசி முடிக்க பத்து நிமிடமாவது ஆகும். அதுவரைக்கும் என்ன பன்றதுன்னு யோசிச்சு சுற்றும் முற்றும் பார்த்திட்டிருந்தப்பத்தான்... நீ என்ப பார்வையில் பட்டே! ஆமா... நகுல் நீ டெல்லியில்தான் இருக்கியா...?"

"ம்... அஞ்சு வருடமா இங்கதான் இ ருக்கேன்..."

"எங்கயாவது வேலைக்கு போறீயா...?"

"இல்லை... வேலை தேடி தேடி அலுத்து போய் - ஒரு தொழிலை ஆரம்பிச்சுட்டேன்..."

"என்ன தொழில்...?"

"நகுல் ஆட்டோ காரேஜ்... கன்னாட் பிளேஸ்லதான் வீடு கடை எல்லாமே... ஒண்டிக்கட்டை வாசம்... நீ

என்ன பண்றே...?"

"பர்னிஸ் லிப்ஸ்...சூப்பரான நிகழ்ச்சி. தொடர்புக்கு திருமதி லீனா வின்சென்ட் அண்ட் மிஸ்டர் வின்சென்ட்...!"

"என்னடா இது...?"

"இதுதான் எனக்கும் என் மனைவிக்கும் தொழில்..."

"இதென்ன பர்னிஸ் லிப்ஸ்..."

"தமிழில் சொல்லிப் பாரு..."

"உதடுகள் சுடும்..."

"நானும் என் மனைவி லீனாவும் நடத்தற ஒரு கலை நிகழ்ச்சிக்கு பேர்தான் உதடுகள் சுடும்..."

"எனக்கு புரியலை..."

"புரியும்படியாவே சொல்றேன். இது ஒரு மேஜிக் ஷோ மாதிரி. நிகழ்ச்சி இரண்டு மணி நேரம் நடக்கும்... லீனா பீங்கான் துண்டுகளை விழுங்குவாள். அமிலத்தை சூப் மாதிரி சப்பி சாப்பிடுவாள்."

"என்ன... அமிலத்தை... சூப் மாதிரி சாப்பிடறதா...?"

"ஆமா...ஆமா..."

"அது எப்படி சாத்தியம்...?"

வின்சென்ட் சிரித்தான், லீனாவுக்கு சாத்தியம்தான்... உதடுகள் புகைய புகைய அவள் அமிலத்தை- கொஞ்சம் கொஞ்சமாய் சப்பி சாப்பிடற



நிகழ்ச்சிதான் எங்களோட சிறப்பு நிகழ்ச்சி. கல்யாணம், டீ பார்ட்டி, கல்லூரி விழாக்களில் எங்கள் நிகழ்ச்சிகள் ரொம்பவும் பிரசித்தம்..."

"நான் கேள்விப்படவே இல்லையே...?"

"ஆட்டோ காரேஜில் உட்கார்ந்திருக்கிற உனக்கு இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்... இப்பக் கூட கல்கத்தாவில்... ஒரு சபா ஏற்பாடு பண்ணியிருக்கிற நிகழ்ச்சிக்குத்தான் போயிட்டிருக்கோம்... மாசத்துல நாலைஞ்சு தடவை... இப்படி வெளியூர் கிளம்பிடுவோம்..."

"நீ சொல்றதைக் கேட்க-கேட்க எனக்கு ஆச்சிரியமாய் இருக்கு வின்சென்ட்! நீ கல்லூரியில் படிக்கும்போது... ஒரு வக்கீலா வரணும்னு ஆசைப்பட்டே! ஆனால்... இன்றைக்கு படிப்புக்கும் உனக்கும் சம்பந்தமில்லாத தொழிலை பண்ணிட்டிருக்கே! சரி வருமானமெல்லாம் எப்படி...?"

"மாசம் பத்தாயிரம் வரைக்கும் சம்பாதிக்கிறோம்! இரண்டு மணி நேர நிகழ்ச்சிதான். ஒரு மணிநேரம் என்னோட மேஜிக் ஷோ... அடுத்த ஒருமணி நேரம் லீனாவோட ஷோ...! அதோ... என் மனைவியே வந்துட்டாள். இன்றைக்கு சீக்கிரமாகவே பேசி முடிச்சிட்டா போலிருக்கு..."

நகுல் திரும்பிப் பார்த்தான்.

பாப் தலையும் கையில்லாத ஜாக்கெட்டுமாய் அந்தப் பெண் வந்துகொண்டிருந்தாள். மாநிறம். சுமாரான

அழகு... கட்டியிருந்த சேலை, தோளில் மாட்டியிருந்த பேக், காலில் போட்டிருந்த செருப்பு, நெற்றியில் வைத்திருந்த ஸ்டிக்கர் பொட்டு எல்லாமே கத்திரிப்பூ நிறத்தில் இருந்தன. குரல் கொடுத்துக் கொண்டே வந்தாள்.

"என்னங்க... நீங்க... இங்கே வந்துட்டீங்க...? உங்களைத் தேடி எங்கெல்லாமோ சுத்திட்டேன்..."

வின்சென்ட் புன்னகைத்தான். "லீனா... ! இவன் என்னோட நண்பன், காலேஜ் மேட்... ஸ்கூல் மேட்... பேரு நகுல்... கல்லூரி படிப்பை முடிச்சப்பறம் இன்னிக்குத்தான் இவனைப் பார்க்கிறேன்..."

"வணக்கம்..." லீனா கைகளை குவிக்க, நகுலும் கையிலிருந்த சிகரெட்டை வீசி விட்டு - "வணக்கம்..." என்றான்.

லீனா சிரித்தாள். "எங்களுக்கு கல்யாணமான இந்த ஒரு வருடத்தில் இன்னைக்குத்தான் இவர் ஒரு 'நண்பர்'ன்னு சொல்லி உங்களை அறிமுகப்படுத்தியிருக்கார்... நீங்களும் கல்கத்தாவுக்கு பயணமா...?"

"இல்லை... ஒரு நண்பரை பார்க்க வந்தேன்..." என்றவன் தன்னைப் பற்றிய விவரங்களை சொல்லிவிட்டு - லீனாவிடம் ஆச்சரியக் குரலில் கேட்டான்.

"நீங்க அமிலம் குடிப்பீங்களாமே...?"

லீனா உதடுகளைப் புன்னகையில் விரித்தாள்.



"எல்லாத்தையும் சொல்லிட்டாரா...?"

"என்னால நம்ப முடியலை..."

"நீங்க தாராளமா நம்பலாம்... நைட்ரிக் அமிலம் எனக்கு தக்காளி சூப் மாதிரி..."

"உங்க 'உதடுகள் சுடும்' நிகழ்ச்சியை ஒரு நாளைக்கு பார்க்கனும். டெல்லியில் எங்கேயாவது நடந்தால் எனக்கு தகவல் சொல்லுங்களேன்... வந்து பார்க்கிறேன்..."

"கண்டிப்பாக... அடுத்த ஞாயிற்றுக் கிழமைகளில் ரீகல் சர்க்கிள் ஹாலில் எங்க நிகழ்ச்சி இருக்கு வாங்களேன்..."

"நிச்சயமாக வருகிறேன்..."

வின்சென்ட் நகுலின் தோளைத் தட்டினான். "நாங்க புறப்படறோம்... லக்கேஜ் பிரிவுக்கு போகனும்... பரிசோதனையை ' முடிக்கனும்... அடுத்த ஞாயிற்றுக்கிழமை பார்ப்போம்..."

விடை பெற்றுக்கொண்டு அவர்கள் நகர, விமான நிலையத்தின் மேற் கூரையில் இருந்து ஒலி பெருக்கி சென்னையிலிருந்து வரும் விமானத்தைப் பற்றி அறிவிப்பு கொடுத்தது. கல்கத்தா போகும் பயணிகளையும் தயார்படுத்தியது.

நகுல் 'வின்சென்ட் - லீனா' நினைப்போடு மறுபடியும் ஒரு சிகரெட்டை புகைத்து முடித்த போது - ரன்வேயின் கோடியில் விமானம் இறங்குவது தெரிந்தது. அது ஊர்ந்து, இறக்கைகளிலும் வால்பகுதிகளிலும் கலர்

கலரான வெளிச்ச சிதறல்களோடு ஒளிர்ந்து கொண்டே வந்தது.

இரைச்சலை நிறுத்திக் கொண்டது.

நகுல், பிரயாணிகள் நடந்து வரும் பாதைக்கு நேராய்ப் போய் நின்று கொண்டான். விமானத்தின் இடுப்பில் ஏணிப்படிகள் பொருத்தப்பட - சதுரக் கதவை திறந்து பயணிகள் வெளிப்பட ஆரம்பித்தார்கள்.

ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண்ணுக்குப் பின்னால் சாம்பவமூர்த்தி வெளிர் நீலநிற சூட்டில் வெளிப்பட்டான். பார்வையாளர் நின்றிருந்த நகுலைப் பார்த்ததும் கையை அசைத்தார் சாம்பவமூர்த்தி.

நகுல் காத்திருக்க - அடுத்த சில வினாடிகளில் வந்து சேர்ந்தான்.

"நகுல் உனக்கு தந்தி கிடைச்சதோ... கிடைக்கலையோன்னு கவலைப் பட்டுக்கிட்டே வந்தேன்..."

"என்ன விசயம்..."

"வா அப்படி ஓரமா போயிடுவோம்..."

போனார்கள். கும்பல் இல்லாத இடத்திற்கு வந்ததும் நின்று கொண்டார்கள். சாம்பமூர்த்தி சுற்றும் முற்றும் பார்த்து விட்டு - நகுலிடம் கிசுகிசுப்பான குரலில் கேட்டான். "தொழில் எப்படி நடக்குது...?"

"போலீஸ் கெடுபிடி அதிகம். ஒரு மாசமா உத்தம புருஷன் வேஷம்தான். ஆட்டோ காரேஜிலேயே



உட்கார்ந்திட்டிருக்கேன்."

"சென்னையில் எனக்கும் இதே நிலைமைதான்."

"சரி, வந்த விசயத்தை சொல்லு."

"ஒரு பெரிய தொழில் வந்திருக்கு."

"தொகை?"

"ஒரு கோடி."

நகுலின் புருவங்கள் உயர்ந்தன.

"என்ன செய்யனும்?"

"இந்த முகவரியை பாரு" சொல்லிக் கொண்டே ஒரு துண்டு காகிதத்தை எடுத்து நீட்டினரன் சாம்பவமூர்த்தி. நகுல் அதை வாங்கி மனதிற்குள் படித்தான். "குபேர், நம்பர் பத்து, மவுரியா ரோடு, வல்லபாய்பட்டேல், டெல்லி பதினாறு."

"சரி, வசயத்தை சொல்லு."

"இந்த குபேர் கிட்ட பைப் பிடிக்கிற பைப் ஒன்னு இருக்கு. அதை சாமர்த்தியாமாக கொண்டு வரனும்."

"அதாவது திருடிட்டு வரனும்?"

"ஆமா."

"அந்த புகை பிடிக்கிற பைப் எதுக்கு?"

சாம்பவமூர்த்தி குரலை தாழ்த்தினான். அந்த சிகரெட் பைப்பை ஒருகோடி ரூபாய் கொடுத்து வாங்க ஆள் தயாராயிருக்கார். ஆள் உள்ளூர் இல்லை. வெளிநாடு! பாங்காக். பெரிய பார்ட்டி.

"ஒரு கோடி ரூபாய் கொடுத்து வாங்கிற அளவுக்கு அந்த பைப்ல அப்படி என்னதான் இருக்கு?"

"டிவைன் நட்சத்திர வைரங்கள்."

"உண்மையாகவா?"

"நம்பகமான செய்தி. அந்த குபேர் அற்புதமாக அந்த வைரங்களை புகை பிடிக்கிற பைப்புக்குள்ளே போட்டு வைச்சிருக்கார். பார்க்கிறதுக்கு அது ஒரு பழைய பைப் மாதிரி இருக்குமாம்."

"இந்த விபரங்களையெல்லாம் உனக்கு சொன்னது யாரு?"

"அந்த பாங்காக் பார்ட்டிதான்"

"அவங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?"

"நகல் இந்த விபரமெல்லாம் நமக்கு தேவையில்லாதது. நான் இப்ப சொன்ன வேலையை நீ முடிச்சிக் கொடுத்தால், அம்பது லெட்ச ரூபாய் உன் பங்கு கிடைக்கும். ரொம்ப நாளைக்கப்பறம் நம்க்கு கிடைச்சிருக்கிற ஒரு பெரிய வியாபாரம் இது."

"அந்த புகை பிடிக்கிற பைப்பை எத்தனை நாளைக்குள்ள கொண்டு வரனும்?"

"பாங்காக் பார்ட்டி பத்து நாள் சென்னையில் இருக்கப் போறாங்க. அதுக்குள்ள அந்த பைப் வேனும்."

"இன்னும் இரண்டே நாள். பைப் என் கையில் இருக்கும்."

"கண்டிப்பா?"



"நிச்சயமாக"

"சரி. நான் கல்கத்தாவுக்கு போயிட்டு வேற ஒரு வியாபாரம் விசயமா ஒரு பார்ட்டியை பார்த்துட்டு இன்றைக்கு ராத்திரியே சென்னை திரும்பிடுவேன். இங்கே காரியம் முடிஞ்சதும் எனக்கு எஸ்.டி.டி. போட்டு பேசிடு."

தலையாட்டினான் நகல்.

கல்கத்தா பயணிகளை ஒலிபெருக்கி இரண்டாவது தடவை கூப்பிடவே, சாம்பமூர்த்தி விடை பெற்றுக்கொண்டு விமானத்தை நோக்கிப் போனான்.

## 2

டெலிபோன் கிணுகிணுத்தது. ராத்திரி எட்டு மணி.

உள்ளறையிலிருந்து வெளிப்பட்ட கல்பனா வேகமாய் டெலிபோனை நெருங்கி ரிசீவரை எடுத்தாள். இருபது வயது உடம்பில் அழகு கொப்பளித்தது.

"அலோ..."

"குபேர் பங்களாதானே இது?" இந்தியில் ஒரு குரல் கேட்டது.

"ஆமா."

"குபேர் இருக்காரா?"

"இருக்கார் நீங்க யார் பேசறது?"

"நான் குபேருக்கு வியாபார நண்பன். பேரு யாதவ். அவர் கூட பேசனும்."

"சாரி சார். இப்ப நேரம் எட்டு மணி. அவர் தூங்க போற நேரம். நாளைக்கு காலையில போன் பண்ணுங்க."

"கண்டிஷன் போடுற நீ யாருன்னு தெரிஞ்சிக்கலாமா?"

"அவரை கவனிச்சுக்கிற நர்சு."

"குபேர் கிட்ட ஒரு வியாபார்ம் விசயமா இரண்டு நிமிடம் பேசனும். அவருக்கு லைன் கொடும்மா."

"வெரி வெரி சாரி சார். நீங்க எதைப் பேசறதாயிருந்தாலும் நாளைக்கு காலையில எட்டு மணிக்கு மேல போன் பண்ணி பேசலாம்."

கல்பனா சொல்லிக்கொண்டிருக்கும்போதே-

அவளுக்கப் பின்னால் காலடிச்சத்தம் கேட்டது.

திரும்பினாள்.

நைட் கவுனில் தன் உயரமான உடம்பை நுழைத்துக்கொண்டு குபேர் நின்றுகொண்டிருந்தார்.

"போன்ல யாரு?"

கல்பனா ரிசீவரை இடது கை விரல்களால் பொத்திக்கொண்டு குபேரை ஏறிட்டாள். "யாரோ யாதவ்வாம். உங்க வியாபார நண்பராம். உங்ககிட்ட பேசனுமாம். நீங்க இப்ப தூங்கப்போற நேரம், நாளைக்கு போன் பண்ணும்படி சொல்லிக்கிட்டிருந்தேன்."

"இதையெல்லாம் சொல்றதுக்கு நீ யாரு? எனக்கு



போன் வந்தால் ரிசீவரைக் கொடுக்க வேண்டியதுதானே? அதிகப்பிரசங்கி! கொண்டா ரிசீவரை" குபேர் கோபமாய் அவள் கையிலிருந்த ரிசீவரை பறித்தார்.

"சா...சார்... ராத்திரி நேரத்துல நீங்க நிம்மதியா தூங்கனும். வியாபார விசயங்களை பேசி டென்சனாயிட்டா, உங்களுக்கு இரத்த அழுத்தம் அதிகமாயிடும்னு டாக்டர் சொல்லியிருக்கார். அதனாலதான்..."

"வெங்காயம்! டாக்டர் சொன்னாராம் இவள் செஞ்சாளாம். உனக்கு எட்டு மணிக்கே டியூட்டி முடிஞ்சி போச்சே. ஏன் இன்னமும் இருக்கே? போய்த் தொலை."

"சா... சார்... வந்து..."

"சொன்னதைச் செய்."

குபேர் கத்த, முகம் கருத்துப்போன கல்பனா, சுவரின் ஆணியில் மாட்டியிருந்த கூடைப்பையை தன் கூடைப்பையை எடுத்துக்கொண்டு கிளம்பினாள். குபேர் ரிசீவரில் பேசுவது கேட்டது.

"சாரி யாதவ்! அந்த அறிவு கெட்ட நர்சுக்கு உனக்கும் எனக்கும் இருக்கிற நட்பு தெரியாது. மருந்தையும் மாத்திரைகளையும் மட்டுமே தெரிஞ்சு வைச்சிருக்கிற அதுக்கு நம்ம வியாபாரத்தைப் பறறி என்ன தெரியும்? நீ ஒன்னும் மனசுல வைச்சுக்காதே."

கல்பனா ஹாலைக் கடந்து போர்டிகோவுக்கு வந்து காம்பவுண்டு கேட்டை நோக்கி வேகமாய் போனாள்.

மனம் பொருமியது.

"நன்றியில்லாத மனிதன். கடந்த இருபது நாளா எழுந்திருக்க முடியாமல் படுக்கையில் கிடந்த மனிதனுக்கு, அருவெருப்பு காட்டாமே அசூகை படாமே எப்படியெல்லாம் பணிவிடை பண்ணியிருக்கேன். இப்போ, குணமாகி உடம்புக்கு அந்த பணக்கார திமிர் வந்ததும், நாக்குல விஷத்தை தடவிகிட்டு ஒவ்வொரு வார்த்தையும் பேசறாா. இனிமேல் இங்கு வேலை பார்க்க சரிபடாது. டாக்டரைப் பார்த்து சொல்லிட வேண்டியதுதான்."

காம்பவுண்ட் கேட்டைத் தாண்டி, அரையிருட்டான தெருவில் வேகமாய் நடந்து பஸ் நிறுத்தத்தை நெருங்கியபோது ஆச்சரியப்பட்டு மலர்ந்தாள்.

நகுல் நின்றிருந்தான்.

"ஹாய்... நகுல்... என்ன இது திடீர்ன்னு?"

அவன் சிரித்தான். "ஏன் என் காதலியைப் பார்க்க நான் வரக்கூடாதா?"

"உங்களுக்கு அந்த நினைப்பு வேற இருக்கா?"

பஸ் நிறுத்தத்தில் யாரும் இல்லாததால், கல்பகாவின் கன்னத்தில் மெல்ல ஒரு தட்டு தட்டினான் நகுல். "நினைப்பு இல்லாமலா வந்திருக்கேன்? வா, அப்படியே நடந்துகிட்டே பேசலாம். உனக்கொண்ணும் அவசரமில்லையே?"

"எனக்கு எந்த அவசரமும் இல்லை."



இவருரும் மெல்ல நடந்தார்கள். பத்தடி போனதும் நகுல் கேட்டான் - "உன் அப்பா எப்படியிருக்கார்?"

"சவுக்கியமாயிருக்கார். காலையில் எழுந்திரிக்க வேண்டியது. குளிக்க வேண்டியது. டிபனைச் சாப்பிட வேண்டியது. எட்டு மணிக்கு கிளம்பினால் இருட்டற வரைக்கும் தோப்பில் நண்பர்களோடு சீட்டு விளையாடிட்டு வீட்டுக்கு வரவேண்டியது. வீட்ல இருக்கிறதை சாப்பிட்டு ஏழு மணிக்கெல்லாம் படுத்துட வேண்டியது. நான் லேட்டா எத்தனை மணிக்கு போனாலும் கதவைத் திறந்து விட்டுட்டு 'இப்பத்தான் வர்றியாம்மா'ன்னு கேட்டுட்டு மறுபடியும் போர்வைக்குள்ளே போயிட வேண்டியது. அப்பப்பா சீட்டாடறதுக்கும் பாக்கெட் மணிக்கும் என்கிட்ட இருந்து பணத்தை வாங்கிக்க வேண்டியது. சொந்தக்காரங்க யாராவது என் கல்யாணத்தைப் பற்றி பேச்செடுத்தால், 'கல்பு இன்னும் குழந்தைதானே. கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்ன்னு சொல்லி கேட்டவங்களோடு வாயைச் சாத்திட வேண்டியது.'

"தம்பி கோபால் ஒழுங்கா வேலைக்கு போயிட்டிருக்கானா?"

"ம்... பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்கா போகாட்டியும் கிடைச்ச இந்த வேலைக்கு தவறாமே போறான். இன்னும் ஆறு மாசத்தில் அவனுக்கு வேலையும் நிரந்தரமாயிடுமாம்! அதுசரி வழக்கமா இந்த நேரத்துக்கு என்னை பார்க்க வரமாட்டீங்களே?

ஏதாவது விசயம் இருக்கா?"

"எந்த விசயமும் இல்லை. உன்னை சும்மா பார்த்துட்டு போலாம்ன்னுதான் வந்தேன். பார்த்து நாலைஞ்சு நாளாச்சே?"

"நான் நம்பமாட்டேன்" நகுலின் விலாவில் இடித்துவிட்டு சிரித்தாள் கல்பகா. "சொல்லுங்க. என்ன விஷயம்?"

"நம்ம கல்யாண விசயம்தான்."

"உங்களுக்கு அந்த ஆசை வேற இருக்கா? ஆட்டோ காரேஜ் தொழிலை நல்ல நிலைக்கு கொண்டு வந்துட்டுதான் கல்யாணம்ன்னு சொல்லிட்டிருந்தீங்க இப்ப தொழில் நல்ல நிலைமைக்கு வந்துடுச்சா?"

"வரப்போகுது."

"புரியலையே?"

"ஆட்டோ கேரேஜ் தொழிலை நல்ல நிலைமைக்கு கொண்டுவரணும்ன்னா பணம் அஞ்சு லட்சமாவது வேணும்னு சொல்லிட்டிருந்தேன் இல்லையா?"

"ஆமா."

"பணத்தை கொடுக்க ஒரு பார்ட்டி சரின்னு சொல்லிடுச்சு."

"பரவாயில்லையே! பார்ட்டி யாரு?"

"இதே டெல்லியில்தான் இருக்கார். தன்னோட காரை சர்வீசுக்கு விடறதுக்காக அடிக்கடி என்னோட ஆட்டோகாரேஜுக்கு வந்துட்டிருந்தார். அவர்



புதைபொருள் ஆராய்ச்சிப் பிரிவில் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். பழங்கால பொருட்களையும் நாணயங்களையும் சேகரிக்கறதுல ஆர்வம் உள்ளவர். இரண்டு நாளைக்கு முந்தி அவர் ஏதேச்சையா என்கிட்ட பேசிட்டிருந்தப்போ. ஒரு விசயத்தை சொன்னார். அதைக் கேட்டதும் எனக்கு ஒரே ஆச்சர்யம்."

"சஸ்பென்ஸ் வைக்காமல் விசயத்தை சொல்லுங்க."

"பழங்கால டிசைனில் புகை பிடிக்கிற பைப் ஒண்ணு வேலை பார்க்கிற குபேர் வீட்ல இருக்காம். நீ பார்த்திருக்கியா கல்பகா?"

கல்பகா புருவங்களை உயர்த்தினாள்.

"புகை பிடிக்கிற பைப்பா?"

"ஆமா."

அவள் யோசிக்க சில விநாடிகளை எடுத்துக்கொண்டு பின் மலர்ந்தாள். "ஆமா! குபேர் தன்னோட ஜிப்பா பாக்கெட்டுல எப்பவும் ஒரு பைப் வைச்சிருப்பார். ஆனால் அதுல அவர் புகை பிடித்து நான் பார்த்ததேயில்லை."

"நீ சொல்ற அந்த பைப்தான் நம்ம பார்ட்டிக்கு வேணுமாம். விலைக்கு கேட்டால் அவர் தருவாரா கல்பகா?"

"சரியா போச்சு! அந்த மனிதன்கிட்ட போய் விலைக்கு கேக்கப் போறீங்களா?"

"ஏன்?"

"அந்த ஆள் ஒரு மனிதனே இல்லை. வேட்டை நாய்."

"என்ன கல்பகா இப்படி சொல்றே? குபேர் ஒரு நோயாளி. அவரைப் போய் இப்படி பேசறியே?"

"அந்த ஆள் நோயாளியா இருந்தவரைக்கும் மனிதனா இருந்தான். நோய் குணமானதும், தன் பணக்கார புத்தியை காட்ட ஆரம்பிச்சுட்டான். கடந்த நாலு நாளா அந்த மனிதன்கிட்டே நான் படாதபாடு பட்டுகிட்டு இருக்கேன். எடுத்ததுக்கெல்லாம் எரிஞ்சு விழறான். மரியாதையில்லாம பேசறான். ஒரு வேலைக்காரியைவிட கேவலமா என்னை நடத்திகிட்டு இருக்கான். நான் டாக்டர்கிட்டே சொல்லிட்டு நாளையிலிருந்து வேலைக்கு வராமே இருந்துடலாமான்னு பார்க்கிறேன்."

"கல்பகா அவசரப்பட்டு அங்கே வேலைக்கு போறதை நிறுத்திடாதே! குபேர்கிட்ட இருக்கிற அந்த புகை பிடிக்கிற 'பைப்' என் கைக்கு வர நீதான் உதவி பண்ணனும்.."

"என்னால என்ன உதவி பண்ணமுடியும்?"

"அந்த பைப்பை அவருக்குத் தெரியாமே நீ எடுத்து கொடுக்க முடியாதா?"

"என்னது?" நடந்துகொண்டிருந்த கல்பகா நின்றாள். "என்னைத் திருட சொல்றீங்களா?"

"இதை திருட்டுன்னு நீ ஏன் நினைக்கிறே? எனக்கு பண்ற உதவியா நினைச்சுக்கோ!"



"நகுல்..."

"இதோ பார் கல்பகா! என்னைப் பொறுத்தவரைக்கும் உன்னைப் பொறுத்தவரைக்கும் ஏன் அந்த குபேரைப் பொறுத்தவரைக்கும் அந்த புகை பிடிக்கிற பைப் ரொம்பவும் சாதாரணமான ஒண்ணு. ஆனால் எனக்கு பணம் தரப்போகிற பார்ட்டி. அதை ஒரு அபூர்வ பொருளா நினைச்சிட்டிருக்கார். பைப்பை அவர் கையில் கொடுத்தால் ரூபாய் அஞ்சு லட்சம் உடனே கிடைக்கும். பணம் கைக்கு வந்ததும் ஒரே மாசத்துல ஆட்டோ கேரேஜை விரிவுபடுத்திட்டு, அதுக்கடுத்த மாசம் நம்ம கல்யாணத்தை முடிச்சுக்கலாம்."

'கல்யாணம்' என்ற வார்த்தையைக் கேட்டதும் கீழே இறங்கி வந்தாள் கல்பகா. "நகுல்! உங்களுக்கு பணம் கிடைக்கப்போறது எனக்கு சந்தோசம்தான். ஆனால், வேலை பார்க்கிற இடத்தில் திருடறது தப்பில்லையா?"

நகுல் பெருமூச்சு விட்டான். பின் கேட்டான்.

"கல்பகா! குபேர் ஒரு பெரிய பணக்காரர்தானே?"

"ஆமா."

"அவரோட சொத்து மதிப்பு எவ்வளவுன்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"சொல்றேன் கேட்டுக்கோ... ஏறக்குறைய பத்து கோடி இந்தியா பூராவும் பணம் கொழிக்கிற கம்பெனிகள். ஊட்டி, கொடைக்கானல், சிம்லா... ஊர்களில் நிறைய

எஸ்டேட்டுகள். இத்தனை சொத்துக்கும் ஒரே வாரிசான பையன் அமெரிக்காவில் இருக்கான். குபேர் வீட்டிலிருந்து பணத்தையோ... நகையையோ நான் எடுக்கச் சொல்லலை... சாதாரண மரத்திலான ஒரு பழைய பைப்பைத்தான்... எடுத்துக் கொடுக்கச் சொல்றேன்... அந்த பைப் காணாமே போனாலும்... அதைப்பத்தி குபேர் பெரிசா கவலைப்படமாட்டார். உடனே புதுசா வேற ஒண்ணை வாங்கிக்குவார்... ஒரு பழைய பைப்... காணாமே போறதாலே... அவருக்கு எந்த பாதிப்பும் ஏற்பட போறதில்லை... இரண்டு நாள் தேடிப் பார்ப்பார்... அப்புறம் விட்டுடுவார்... அவ்வளவுதான்."

கல்பகா உதட்டைக் கடித்துக் கொண்டு யோசித்தாள். பின் நிமிர்ந்தாள். "எனக்கு குழப்பமா இருக்கு நகுல்..."

"ஒரு குழப்பமும் இல்லை... எனக்கு பணம் கிடைக்கிறதுக்கான வாய்ப்பு இது ஒண்ணுதான்... பார்ட்டி பணத்தை வைச்சுகிட்டு ரெடியா இருக்கார். அவர் கேட்கிற அந்த பைப் குபேர்கிட்ட இல்லமே... வேற யார்கிட்டயாவது இருந்திருந்தால்... நான் 'முடியாது'ன்னு சொல்லியிருப்பேன். நீ அந்த குபேருக்கு நர்சாக இருக்கிற ஒரேயொரு காரணத்துக்காகத்தான்... பைப்பை கொண்டு வந்து தர்றதா பார்ட்டிகிட்டே சொல்லியிருக்கேன்... நீ மனசு வைச்சா... என் தொழிலும் மேல வரும்... நம்ம கல்யாணமும் நடக்கும்... என்னைப் பொறுத்தவரைக்கும் இது திருட்டில்லை... ஒரு நல்ல காரியம்..."



"நகுல்! எனக்கு... எனக்கு..." குரல் வராமல் திணறினாள் கல்பகா.

"சொல்லு..."

"எனக்கு... அந்த குபேரை நினைச்சாலே பயமாயிருக்கு... மனுசனுக்கு கழுகுப் பார்வை. எதை செஞ்சாலும் குற்றம் சொல்கிற மனோபாவம்..."

"இருக்கட்டுமே! நீ கொஞ்சம் துணிச்சலை வரவழைச்சுகிட்டா போதும்... அந்த பைப்பை எடுத்து நீ மறைச்சு வைக்கிறதுக்கு... மீறி மீறிப்போனா பத்து விநாடிதான் ஆகும்..."

"இன்னொரு பிரச்சினை இருக்கு நகுல்..."

"என்ன...?"

"அவர் அந்த பைப்பை எப்பவும் ஜிப்பாவுக்குள்ளேயேதான் வைச்சிட்டிருக்கார்... எப்பவாவது கையில் எடுப்பார்... கொஞ்சநேரம் வைச்சிட்டிருந்துட்டு... மறுபடியும் ஜிப்பா பாக்கெட்டுக்குள்ளே போட்டுக்குவார்... பாக்கெட்டுக்குள்ளே இருக்கிற அதை நான் எப்படி எடுக்க முடியும்...?"

"ஏன் முடியாது...? உனக்கு வீட்ல எத்தனை மணி நேர டியூட்டி...?"

"பனிரெண்டு மணி நேரம்..."

"அதாவது காலையில் எட்டு மணியிலிருந்து இராத்திரி எட்டு மணி வரைக்கும்...?"

"ஆமா..."

"இந்த பனிரெண்டு மணி நேரமும்... அவரை கவனிச்சுக்க வேண்டிய வேலை உன்னோடதுதானே...?"

"ஆமா..."

"பங்களாவிலே மொத்தம் எத்தனை வேலைக்காரங்க...?"

"நாலுபேர்... சமையல்காரன், தோட்டக்காரன், வீட்டை சுத்தம் பண்ண இரண்டு பேர்... அவ்வளவுதான்..."

"இந்த நாலுபேர்ல யாரும் குபேர் இருக்கிற ரூமுக்கு வர்மாட்டாங்க இல்லையா...?"

"ஆமா..."

"மருந்து, மாத்திரை, பழரசம், சாப்பாடு... இதெல்லாம் வேளா வேளைக்கு கொடுக்கிறது உன் வேலைதானே...?"

"ஆமா..."

"அவர் பழரசம் சாப்பிடறது எந்த நேரம்...?"

"மத்தியானம் இரண்டு மணி..."

"வசதியா போச்சு... இந்த பழரசத்துல ஒரு தூக்க மாத்திரையை பொடி பண்ணி கலந்துடு... குபேர் ஆழமான தூக்கத்துக்கு போயிடுவார்... கொஞ்சநேரம் கழிச்சு யாரும் பார்க்காத நேரமா... அவரோட ரூமுக்கு போய் - பாக்கெட்ல இருக்கிற பைப்பை எடுத்துகிட்டு



வந்துடலாமே..."

"நகுல்... நீங்க இப்ப சொல்லச் சொல்லவே... என்ன நெஞ்சு பூராவும் 'திக் திக்'ன்னு இருக்கு. அந்த மனுஷன் நீங்க நினைக்கிற மாதிரி சாமானியப்பட்டவரில்லை..."

"புத்தியை உபயோகித்துப் பண்ணினால், எப்பேர்ப்பட்டவரையும் வீழ்த்தலாம். தூக்க மாத்திரை கலந்த பழரசம் சாப்பிட்ட குபேர்கிட்டயிருந்து... பைப்பை எடுக்கிறது ஒரு பெரிய விஷயமே இல்லை... சுலபமா எடுத்துடலாம்..."

"சரி... எடுத்த பைப்பை எங்கே மறைச்சு வைச்சுக்கிறது?"

"இடுப்புச் சேலை மடிப்பில..."

"வேண்டாம்... நகுல்..."

"பின்னே...?"

"நீங்க பங்களாவுக்கு பின்பக்கமா வந்து நில்லுங்க... குபேர்கிட்டயிருந்து பைப்பை எடுத்ததும்... உங்ககிட்ட கொண்டுவந்து கொடுத்துடறேன்..."

"இதுவும் சரிதான்...! காரியத்தை நாளைக்கு மத்தியானமே அரங்கேற்றிவிடலாமா...?"

"நாளைக்கேவா..."

"நாளைத் தள்ளிப் போடக்கூடாது கல்பகா... தைரியம் இருக்கிறப்பவே காரியத்தை முடிச்சுடணும்... குபேர் மத்தியானம் இரண்டு மணிக்குத்தானே பழரசம் சாப்பிடுவார்..."

"ஆமா..."

"நான் சரியா இரண்டரை மணிக்கு பங்களாவுக்கு பின்பக்கமா வந்து நின்னுட்டிருக்கேன். பைப்பை எடுத்ததும் என்கிட்டே கொண்டுவந்து கொடுத்துடு..."

"ச... சரி..."

"கடைசி நேரத்துல... பயந்துகிட்டு... மனசை மாத்திக்கமாட்டியே...?"

"மா... மாட்டேன்..."

"மறந்துடாதே... நாளைக்கு மத்தியான் இரண்டரை மணிக்கு... சரியா இரண்டரை மணிக்கு... குபேர் பங்களாவின் பின்பக்க கதவுகிட்ட நின்னுட்டிருப்பேன்... பைப்பை ஒரு பேப்பர்ல சுத்தி கொண்டாந்து கொடுத்துடு..."

பயமாய் தலையாட்டினாள் கல்பகா.

## 3

மறுநாள் காலை.

எட்டுமணிக்கெல்லாம் குபேரின் பங்களாவுக்கு வந்துவிட்டாள் கல்பகா. உடம்பில் ஜுரம் அடிக்கிற மாதிரி உணர்வு. அவள் பங்களாவுக்குள் நுழைந்தபோது, டாக்டர் வாகீசன் மட்டும் முன்னறையில் இருந்தார். ஆங்கில தினசரியில் மூழ்கியிருந்தார்.

"குட்மார்னிங் டாக்டர்..."

டாக்டர் பேப்பரிலிருந்து நிமிர்ந்து புன்னகைத்தார்.



"குட்மார்னிங் கல்பகா... சரியா எட்டு மணிக்கு வந்துட்டியே? இப்படி உட்கார்... குபேர் பாத்ரூம்ல இருக்கார்..."

டாக்டருக்கு எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள் கல்பகா. டாக்டர் கேட்டார். "என்னம்மா குபேர்க்கு வேளா வேளைக்கு அட்டவணைப்படி எல்லாம் கொடுத்துட்டு வர்றீயா...?"

"கொடுத்துட்டு வர்றேன் டாக்டர்..."

"இன்னும் ஒரு பத்து நாளைக்கு நீ இங்கே இருக்க வேண்டியது வரும். அப்புறம் ஆஸ்பத்திரிக்கு வந்துடலாம்..."

"டாக்டர்..." என்று தயக்கமாய் குரலை இழுத்தாள் கல்பகா.

"என்னம்மா...?"

கல்பகா சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு சொன்னாள். "கடந்த நாலைஞ்சு நாட்களா குபேர் நடந்துக்கிற முறையை சரியில்லை... டாக்டர்..."

"சரியில்லைன்னா எப்படி...?"

"எதுக்கெடுத்தாலும் எரிஞ்சு விழறார்... மருந்து, மாத்திரை, கஞ்சி, பழரசம் எதைக் கொண்டுபோய் கொடுத்தாலும் முறைக்கிறார். சொன்ன பேச்சைக் கேட்கறதில்லை. கத்தி பேசறார்..."

டாக்டர் சிரித்தார்.

"குபேர் சத்தம் போட்டால்... கோபிச்சுக்காதேம்மா...

அப்படி சத்தம் போடறதுக்கு காரணம் அவரோட இயலாமைதான்."

"இயலாமையா...?"

"ஆமாம்மா... குபேர் நல்லா சாப்பிடக்கூடியவர். வாரத்துல அஞ்சு நாள் கோழி, கறின்னு, விழுங்கிட்டிருந்தவர்... இனிமே அதையெல்லாம் அவர் சாப்பிடக்கூடாதுன்னு வாயைக் கட்டிப் போட்டிருக்கேன். அதான் கோபம்..."

உள்ளேயிருந்து நடைச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து குபேர் தேங்காய்ப்பூ துவாலையால் ஈர முகத்தை ஒற்றிக் கொண்டே வந்தார்.

கல்பகா எழுந்து நின்றாள்.

"குட்மார்னிங் சார்..."

"ம்... ம்..." பதில் சொல்லாமல் டாக்டர் வாகீசனிடம் திரும்பினார் குபேர்.

"இனிமேலும் எனக்கு நர்ஸ் வேணுமா டாக்டர்... என்னோட காரியங்களை நானே கவனிச்சுக்கிறேனே..."

"நோ... நோ... இன்னும் பத்து நாளைக்காவது... ஒரு நர்சோட மேற்பார்வையில் நீங்க இருக்கணும்...! இப்ப நீங்க இன்னும் டிபன் சாப்பிடலையே...?"

"இல்லை..."

டாக்டர் கல்பகாவிடம் திரும்பினார். "போய்... டிபனுக்கு ஏற்பாடு பண்ணும்மா..."



கல்பகா உள்ளே எழுந்துபோக - குபேர் டாக்டரிடம் சொல்லிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது. "பெரிய டிபன்... வெண்ணெய் ஜாம்... எதுவுமே தடவாத இரண்டு ரொட்டித் துண்டு. உப்பில்லாத அரை தம்ளர் ராகி கஞ்சி இதுவா டிபன்...?"

"இதோ பாருங்க குபேர்... கொஞ்ச நாளைக்கு நீங்க உங்க வாயைக் கட்டுப்படுத்திக்கணும்... இரத்த அழுத்தம் இயல்பான நிலைக்கு வந்தாத்தான்... நீங்க ஆரோக்கியமா இருக்க முடியும்... போய் டிபனை முழுங்க... நாளைக்கு காலையில வந்து பார்க்கிறேன்..."

டாக்டர் எழுந்துவிட்டார்.

கல்பகா உள்ளே போய் - சமையல்காரர் எடுத்து வைத்திருந்த ரொட்டித் துண்டுகளையும் அரை தம்ளர் ராகிக் கஞ்சியையும் கொண்டு வந்து சாப்பாட்டு மேசை விரிப்பின் மேல் வைத்துவிட்டு - குபேரிடம் வந்தாள்.

"டிபன் தயார் சார்..."

"ம்... ம்..." உறுமிக்கொண்டே எழுந்தவரின் - ஜிப்பா பை லோசாய் வாய் பிளந்துகொள்ள - உள்ளே அந்த புகைபிடிக்கும் பைப் ஒரு விநாடி தெரிந்து மறைந்தது.

கல்பகாவின் மனசுக்குள் ஆச்சரியம் அலையடித்தது.

'அப்படியொன்றும் வேலைப்பாடுள்ள... பைப் மாதிரி தெரியவில்லை. சாதாரண பைப் மாதிரிதானே தெரிகிறது...?'

"இதுவா கலைப்பொருள்...?"

"இதற்கா ஐந்து லெட்ச ரூபாய் விலை...?"

"என்ன பராக்கு பார்த்திட்டிருக்கே...?" - குபேர் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்தாள் கல்பகா.

"சாரி... சார்..."

"எதைக் கேட்டாலும் ஒரு 'சாரி' சொல்லிட வேண்டியதுதான்... காலங்கார்த்தாலே எதைப்பத்தி ஞாபகமோ...? மருந்து மாத்திரையை... கொடுக்கும்போது மாத்தி கொடுத்துடாதே... ஒரேடியா பரலோகம் போயிடுவேன்..." - சொல்லிக்கொண்டே உள்ளே போனார் குபேர். அவருடைய முதுகையே வெறித்துப் பார்த்தாள் கல்பகா.

'சே! என்ன மனிதன் இவர்...? என்னதான் பணம் இருந்தாலும் இப்படியொரு திமிரா...? இவர்கிட்டே இருக்கிற அந்த பைப்பை எடுத்து கொடுத்து - நகுலுக்கு உதவி பண்றதுல தப்பே இல்லை...'

கல்பகாவின் மனதில் முன்பு இருந்த பயம் இப்போது காணாமல் போயிற்று.

## 4

மதியம் இரண்டு மணி

சாத்துக்குடியைப் பிழிந்து - ஒரு பெரிய எவர்சில்வர் தம்ளர் நிறைய சாறு எடுத்துக்கொண்ட கல்பகா - குளுகோசை தூக்க மாத்திரையோடு சேர்த்து - பொடி



செய்து போட்டு - கரண்டியால் கலக்கிவிட்டா[illegible] மெல்லிய பிளாஸ்டிக் தட்டினால் தம்ளரின் [illegible] மூடிக்கொண்டு - குபேரின் அறைக்குள் நுழை[illegible]

புத்தகமொன்றை புரட்டிக்கொண்டிருந்த குபேர் தலை நிமிர்ந்தார்.

"என்ன...?"

"ஜூஸ் சார்..."

"கொண்டா! குடிச்சு தொலைக்கிறேன்..." கை நீட்டி தம்ளரை வாங்கிக் கொண்டவர் - வேண்டா வெறுப்பில் ஒரே மூச்சில் குடித்துவிட்டு - காலி தம்ளரை அவளிடம் நீட்டினார். கல்பகா அதை வாங்கிக்கொண்டு மவுனமாய் நகர - குரல் கொடுத்தார்.

"நில்லு..."

நின்றாள்.

"நான் தூங்கிட்டிருக்கும்போது... எனக்கு ஏதாவது போன் வந்தால் எழுப்பு... தூங்கிட்டிருக்கார்னு சொல்லிடாதே."

"எஸ்... சார்."

தலையாட்டிவிட்டு அறைக்கு வெளியே வந்தாள். கதவை சாத்திவிட்டு முன்பக்கமாய் வந்து சோபாவில் உட்கார்ந்து மாத நாவல் ஒன்றை பிரித்து வைத்துக்கொண்டாள். பத்து பக்கங்களை புரட்டியிருந்தபோது நேரம் இரண்டேகால் ஆகியிருந்தது.

எழுந்தாள்.

வேலைக்காரர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்வதற்காக ஒருமுறை வீட்டைச் சுற்றி வந்தாள்.

சமையல்காரர் உள் நடையில் சுவருக்கு சாய்ந்து உட்கார்ந்து கோழித் தூக்கம் போட்டுக் கொண்டிருக்க, தோட்டக்காரர் முன்பக்க லானில் உட்கார்ந்து காய்ந்த புற்களை பிடுங்கிக் கொண்டிருந்தார். மீதி இருந்த இரண்டு பேர் மாடியறை ஒன்றை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள்.

'குபேர் தூங்கியிருப்பாரா?'

கல்பகா மெல்ல நடந்து வந்து - குபேரின் அறையை நெருங்கி கதவை மெல்ல தள்ளிப் பார்த்தாள்.

குபேர் மல்லாந்து - வாய் பிளந்து - நிர்ச்சலனமாய் தூங்கிக் கொண்டிருந்தார். கதவை மெல்லத் தட்டி சத்தம் கொடுத்து பார்த்தாள்.

'மனிதரிடமிருந்து எந்த அசைவும் இல்லை.'

மெல்ல உள்ளே நுழைந்து கட்டிலை நெருங்கி - குபேரின் தலைமாட்டில் வந்து நின்று - அவர் அணிந்திருந்த ஜிப்பாவின் வலதுபக்க பாக்கெட்டை இடது கை ஆட்காட்டி விரலால் விலக்கி பார்த்தாள்.

உள்ளே -

அந்த புகைப்பிடிக்கும் பைப் தெரிந்தது.

இதயம் வேகமாய் துடித்துக் கொண்டிருக்க, வலது



கையின் இரண்டு விரல்களை மட்டும் பாக்கெட்டுக்குள் நுழைத்து பைப்பை வெளியே எடுத்தாள். பைப் கைக்கு வருவதற்குள் உடம்பு வியர்த்து கொட்டியிருந்தது.

பைப்பை சேலைத் தலைப்பால் மறைத்துக் கொண்டு அறையைவிட்டு வெளியில் வந்து சுவர் கடிகாரத்தை பார்த்தாள்.

மணி 2.20.

மாத நாவலை மறுபடியும் விட்ட இடத்திலிருந்து படிக்க ஆரம்பித்து மணி 2.30 ஆனதும் எழுந்து பங்களாவின் பின்பக்கத்தை நோக்கிப் போனாள்.

பின்பக்கமாய் அடர்த்தியான நிழலைக் கொட்டிக் கொண்டிருந்த தென்னை மரங்களுக்கு மத்தியில் நடந்து - பின்பக்க கதவுக்கு வந்து - அதன் தாழ்ப்பாளை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தாள்.

நகுல் நின்றிருந்தான்.

கல்பகாவைப் பார்த்ததும் பதட்டப்பட்டான்.

"என்னாச்சு?"

"இந்தாங்க பைப்."

"யாரும் பார்த்துடலையே?"

"பார்க்கிற மாதிரியா எடுப்பேன்?"

பைப்பை வாங்கி பாக்கெட்டுக்குள் மறைத்துக்கொண்ட நகுல் சொன்னான். "நாளைஞ்சு நாளைக்கு நீயும் நானும் சந்திக்க வேண்டாம் கல்பகா. உடனே உன்னை வந்து சந்திக்கிறேன்."

"சரி" தலையாட்டிய கல்பகா கதவை சாத்தி தாழிட்டுவிட்டு பங்களாவுக்குள் திரும்பவும் வந்து பழைய இடத்தில் உட்கார்ந்து மாத நாவலை பிரித்து வைத்துக்கொண்டாள்.

## 5

நகுல் தன் அறைக்கு திரும்பியதும் முதல் வேலையாக கதவைச் சாத்திக்கொண்டு அந்த பைப்பை எடுத்து சோதித்தான். ரொம்பவும் சாதாரணமான பைப். அழுக்கு நிறம். திருடுபவர்கள் கூட 'இது எதற்கு?' என்று விட்டுவிட்டு போகக்கூடிய அளவில் எளிமை காட்டியது. அதன் இரண்டு பக்க உடம்புகளையும் ஒரு சின்ன ஸ்க்ரு பிணைத்திருந்தது.

நகுல் மேசையைத் திறந்து ஒரு சின்ன ஸ்க்ரு டிரைவரை எடுத்து பைப்பில் இருந்த ஸ்க்ருவை திருகினான்.

ஆணி கழன்றுகொள்ள -

பைப் இரண்டாக பிரிய -

உள்ளே -

பிரகாசமான - மெலிதான நீல வர்ணத்தில் பட்டாணி சைசில் வைரங்கள். ஒளி உண்மையாகவே கண்களைக் கூசியது.

நகுல் பரவசாய் எண்ணினான்.

மொத்தம் பதினோரு வைரங்கள்.



'இதுதான் டிவைன் ஸ்டார் வைரங்களா? உடம்பு மகிழ்ச்சியில் லேசாய் மிதக்க - வைரங்களை அள்ளினான். அவைகள் நிறம் நிறமாய் ஒளிர்ந்து அறை பூராவும் வெளிச்சத்தை அனுப்பியது.'

'சாம்பமூர்த்திக்கு உடனே தகவல் தெரிவிக்க வேண்டும்.'

வைரங்களை பழைய படியே பைப்பில் போட்டு - அதன் இரண்டு பாகங்களை ஸ்க்ருவால் இணைத்தான். பாண்ட் பாக்கெட்டில் பத்திரபடுத்தி அறையைப் பூட்டிக்கொண்டு. துர்க்காராம் லே-அவுட்டில் இருந்த டெலிகிராமம் ஆபீசுக்கு வந்தான். எஸ்.டி.டி. பாரம் ஒன்றை வாங்கி பூர்த்தி செய்து. பணம் செலுத்தி கண்ணாடிக் கூண்டுக்குள் நுழைந்து ரிசீவரை எடுத்துக்கொண்டு - சென்னையில் இருந்த சாம்பூர்த்தியன் டெலிபோன் எண்ணுக்கு பட்டன்களைத் தட்டினான்.

இரண்டு தடவை லைன் கிடைக்க மறுத்து - மூன்றாவது தடவை கிடைத்தது. சாம்பமூர்த்தியே பேசினான்.

"அலோ..."

"சாம்பமூர்த்தி... நான் நகுல்..."

"உன்னோட போனுக்காகத்தான் காத்திட்டிருக்கேன். என்ன ஏதாவது முயற்சி பண்ணிட்டிருக்கியா?"

"முயற்சியா...? காரியமே முடிஞ்சாச்சு..."

"உண்மையாகவா...?"

"இப்ப கையில இருக்கு..."

"என்னால நம்ப முடியலை..."

"தாராளமா நம்பலாம்..."

"எப்படி முடிஞ்சது...?"

"போன்ல வேண்டாம்... நேர்ல சொல்றேன்... சென்னைக்கு நான் எப்போ புறப்பட்டு வரட்டும்...?"

"அடுத்த விமானத்தை பிடி..."

"இனி சென்னைக்கு அடுத்த விமானம் நாளைக்கு காலையில ஆறு மணிக்குத்தான்..."

"சரி... அதிலேயே புறப்பட்டு வா..."

"பொருளை வாங்கிக்க பார்ட்டி ரெடியா...?"

"காத்திட்டிருக்காங்க... பணத்தோடு..."

"ம்... பொருள் பத்திரம்..."

"இப்ப... என்னோட உயிர் ரெண்டாம் பட்சம்... முதல் பட்சம் அதுதான்..." சொல்லி சிரித்து - ரிசீவரை சாத்தினான் நகுல்.

## 6

மாலை ஆறு மணி. குபேரின் பங்களா பரபரப்பில் விழுந்திருந்தது. போர்டிகோவில் இரண்டு போலீஸ் ஜீப்கள் நின்றிருக்க - உள்ளே போலீஸ் அதிகாரிகளின் நடமாட்டம் தெரிந்தது. இன்ஸ்பெக்டர் திவாரி - க்



வெளுத்துப் போய்கிடந்த - குபேரை விசாரித்துக் கொண்டிருந்தார். அறைக்குள்ளே சுவரோரமாய் வேலையாட்கள் - கல்பகா நின்றிருந்தார்கள். திவாரி இந்தியின் பேசினார். "யோசித்து சொல்லுங்கள் மிஸ்டர் குபேர்... அந்த புகைப்பிடிக்கும் பைப்பை உங்கள் ஜிப்பா பைக்குள்தான் வைத்திருந்தீர்களா?"

"ஆமாம்..."

"அந்த பைப்புக்குள் உங்கள் குடும்பச் சொத்தான ஆபூர்வ வைரங்களை - வைத்திருந்தது வெளியே யார் யாருக்கு தெரியும்?"

"யாருக்கும் தெரியாது... அது எனக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்..."

"உங்களுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம் என்றால்... அது திருட்டு போக வாய்ப்பில்லை...?"

"அதுதான் எனக்கும் புதிராக இருக்கிறது..."

"நீங்கள் தூங்கி எழுந்தபோது நேரம் எவ்வளவு..."

"ஐந்து மணி..."

"தூங்கி எழுந்ததுமே... பைப் காணாமல் போயிருப்பதை கண்டுபிடித்துவிட்டீர்களா...?"

"ஆமாம்... எப்போது நான் தூங்கி எழுந்தாலும்... என் கை தானாகவே... ஜிப்பா பையில் இருக்கும்... பைப்பை தொட்டுப் பார்த்து பாக்கெட்டில் அது இல்லையென்று தெரிந்ததுமே பதறிப் போனேன்... கட்டிலுக்கு கீழே... விழுந்துவிட்டதோ என்று

பார்த்தேன்... கிடைக்கவில்லை... வீடு பூராவும் தேடிப் பார்த்து - வேலைக்காரர்களை விசாரித்த பின்தான் உங்களுக்கு போன் செய்தேன்..."

"மிஸ்டர் குபேர்..: பைப்பில் இருந்த வைரங்கள் அபூர்வமானவை. விலையுயர்ந்தவை என்று சொன்னீர்கள்... அதை ஏன் ஒரு இரும்பு பெட்டியிலோ - பாங்க் லாக்கரிலோ வைக்கவில்லை..."

"எங்கள் குடும்ப ஜோதிடரின் வாக்குப்படி... அந்த பாரம்பரியம்மிக்க அபூர்வ வைரங்கள்... என் உடலையொட்டியபடியே இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் நான் எடுத்த காரியங்கள் வெற்றியில் முடியும்..."

இன்ஸ்பெக்டர் திவாரி குரலை தாழ்த்திக் கொண்டார். "அந்த பைப்பை யார் எடுத்திருப்பாங்கன்னு நினைக்கறீங்க...? உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கா...?"

குபேரின் பார்வை சுவரோரமாய் நின்றிருந்த வேலைக்காரர்கள். கல்பகாவின் மேல் தாவியது.

"இந்த வீட்டில் இவர்கள் ஐந்து பேர் மட்டும்தான் இருந்தார்கள். எடுத்திருந்தால்... இவங்கள்ள யாராவது ஒருத்தர்தான் எடுத்திருக்கணும்..."

திவாரி எழுந்து - கல்பகாவை நெருங்கினார். அவள் முகத்தில் எந்தவிதமான உணர்ச்சியையும் காட்டாமல் நின்றிருந்தாள்.



"இந்த வீட்ல எத்தனை நாளா நர்சா இருக்கே...?"

"கடந்த பதினைஞ்சு நாளா..."

"அந்த பைப்பை நீ எடுத்தியா...?"

"நான் எதுக்காக அந்த பைப்பை எடுக்கணும்... அவர்கிட்டே அந்த பைப் இருக்கிறதை பார்த்திருக்கேன்... ஆனால் அந்த பைப் இவ்வளவு பெரிய விலையுயர்ந்த பொருள்ன்னு தெரியாது... நான் அவருக்கு ஒரு நர்சாயிருந்து என்னோட கடமைகளை செஞ்சேன் அவ்வளவுதான்..."

"மத்தியானம் ரெண்டு மணிக்கு... மிஸ்டர் குபேர்க்கு நீ பழரசம் கொடுத்துவிட்டு- அவர் தூங்கியெழுறவரைக்கும்... நீ இந்த பங்களாவில் என்ன பண்ணிட்டிருந்தே?"

"எனக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூம்ல உட்கார்ந்து... புத்தகம் படிச்சிட்டிருந்தேன்..."

"ரெண்டு மணியிலிருந்து அஞ்சு மணி வரைக்கும்... குபேர் ரூம் பக்கம் நீ போகவே யில்லையா...?"

"எப்பவுமே... அவர் தூங்கி விழிச்சதும் என்னைக் கூப்பிடுவார்... அவரோடு குரல் கேட்ட பின்னாடிதான் போவேன்..."

திவாரி வேலைக்காரர்கள் ஒவ்வொருவரையும்... பக்கத்திலிருந்த அறைக்கு தனித் தனியாய் கூட்டிக்கொண்டு போய் விசாரித்தார்.

ஏறக்குறைய இரண்டு மணி நேர விசாரணைக்குப் பின் - குபேரிடம் வந்தார் திவாரி. ஆங்கிலத்தில் மெல்லிய குரலில் சொன்னார். "சார்... அந்தப் பைப்பை நர்சோ... வீட்டு வேலைக்காரங்களோ எடுத்திருக்க வாய்ப்பில்லை..."

"எப்படி சொல்றீங்க...?"

"விலையுயர்ந்த அபூர்வ வைரங்கள் அந்த பைப்பில் இருக்கிற உண்மை தெரிஞ்ச யாரோ ஒருத்தர்தானே... அதை எடுத்திருக்கணும்..."

"ஆமா..."

"அப்படி எடுத்தவங்க... இந்த வீட்டிலேயே... இன்னும் இருப்பாங்களா...?"

"இன்ஸ்பெக்டர்! நீங்க என்ன சொல்றீங்க...?"

"சார்... அந்த பைப்பை எடுத்துட்டு போனவங்க... யாரோ வெளியாள்தான்... அவங்க அநேகமா உங்களுக்கு வேண்டியவங்களா இருக்கலாம்... வேலைக்காரங்களை நல்ல விசாரிச்சு பார்த்துட்டேன்... அவங்க பேச்சும்... விடற கண்ணீரும் உண்மை... அந்த நர்ஸ் மேலயும் சந்தேகப்பட முடியலை... நீங்க கொஞ்சம் நல்லா யோசிச்சு பாருங்க... பைப்பில் வைரங்கள் இருக்கிற விஷயம்... வெளி நபர்கள் யார் யாருக்கு தெரியும்...?"

குபேர் யோசித்துவிட்டு சொன்னார். "அந்த வைரங்கள் எப்போதும்... என் உடம்போடு ஒட்டி இருக்கணும்ன்னு சொன்ன ஜோசியர்க்கு தெரியும்..."



"அப்புறம்...?"

"வெளிநாட்ல இருக்கிற என் மகனுக்குத் தெரியும்..."

"இன்னும்...?"

"குபேர் தீவிரமாய் யோசித்தார்.

## 7

இரவு ஒன்பது மணி.

அசோகா பில்லர்க்கு எதிரேயிருந்த - டெலிகிராப் ஆபீஸ் எஸ்.டி.டி. டெலிபோன் பூத்திலிருந்து நகுல் பேசிக்கொண்டிருந்தான்.

"சாம்பமூர்த்தி! ரெண்டு நாளைக்கு சென்னை விமானம் எதிலும் டிக்கெட் இல்லை... நான் நாளை கழிச்சு... மறுநாள்... புறப்பட்டு வர்றேன்..."

"பார்ட்டி இங்கே காத்திட்டிருக்காங்க... நகுல்..."

"நானென்ன பண்ணட்டும்...? டிக்கெட் கிடைக்கலையே...?"

"முயற்சி பண்ணிப் பாரு..."

எல்லாவகையிலும் பார்த்துட்டேன்... சென்னையில் ஏதோ அரசியல் மாநாடாம்... எம்.பி.க்கள் இரண்டு நாளைக்கு... விமானத்தை குத்தகைக்கு எடுத்துக் கிட்டாங்க..."

"நாளை கழிச்சு மறுநாள் கண்டிப்பா வந்துடுவியா...?"

"வராமே...?"

"சரக்கு...?"

"பத்திரமா இருக்கு..."

"அங்கே எந்த பிரச்சினையும் இல்லையே...?"

"இதுவரைக்கும்... ஒண்ணும் இல்லை..."

"நகுல்! இன்னமும்... எனக்கு... ஆச்சரியம்தான்..."

"எது...?"

"உன் கைக்கு சரக்கு வந்து சேர்ந்த விதம்தான்..."

"ஆச்சரியப்பட்டுகிட்டே இரு... நேரில் வந்து சொல்றேன்..." ரிசீவரை வைத்துவிட்டு - பூத்திலிருந்து வெளிப்பட்டு - எஸ்.டி.டி கவுண்டரில் கிளார்க்கிடம் கணக்கை முடித்துக் கொண்டு- வாசலில் நிறுத்தியிருந்த காருக்கு வந்தான். அதை விரட்டிக்கொண்டு - வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது - ஆச்சரியப்பட்டான்.

வாசலில் - கற்பகா நின்றிருந்தாள்.

"ஏய்... கல்பகா...! என்ன இது... இந்த நேரத்துல...?" அவள் முகத்தை கடுகடுப்பாய் வைத்தபடி சொன்னாள்.

"உங்களை பார்க்கத்தான் வந்தேன்..."

"என்ன விஷயம்...?"

"எதுக்காக என்கிட்டே பொய் சொன்னீங்க...?"

"பொய்யா...?"

"ஆமா... குபேர்கிட்டே இருந்த பைப்... ஒரு கலைப்பொருள்... அது இதுன்னு கதை விட்டீங்களே...?



உண்மையா அது ஒரு கலைப்பொருளா...?"

"கல்பகா...! நீ என்ன சொல்றே..?"

"அந்த பைப்பில் அபூர்வமான வைரங்கள் இருக்குன்னு சொல்றேன்..."

நகுல் திடுக்கிட்டான். யாராவது தங்கள் பேச்சை கவனிக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் இல்லை.

"கல்பகா...! முதல்ல கார்ல ஏறு... எதைப் பேசறதாயிருந்தாலும் காரில் உட்கார்ந்து பேசுவோம்..."

"இந்தக் கார் யாரோடது...?"

"ரிப்பேர்க்காக... ஒரு பார்ட்டி கொண்டுவந்து காரேஜில் விட்ட கார்..." சொல்லிக்கொண்டே முன்கதவைத் திறந்துவிட்டான். கல்பகா ஏறி அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

கார் கிளம்பியது. தெரு முனையைத் தாண்டுகிறவரைக்கும் மவுனமாய் இருந்த நகுல் பின்பு கேட்டான்.

"அந்த பைப்பில் வைரங்கள் இருக்கிறதா உனக்கு யார் சொன்னது...?"

கல்பகா கோபமாய் அவனை ஏறிட்டாள். "விவகாரம் தலைக்கு மேல் போயாச்சு நகுல்... பைப் காணலைன்னு தெரிஞ்சதுமே குபேர் போலீசுக்கு போன் பண்ணிட்டார் இன்ஸ்பெக்டர் வந்ததும் குபேர் -

பைப்பில் வைரங்கள் இருக்கிற விபரத்தைச் சொல்லவும் எனக்கு அதிர்ச்சி போலீஸ் விசாரணை இரண்டு மணி நேரத்துக்கு மேல் நடந்தது... நல்லவேளையா போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு என் மேலயும்... வேலைக்காரங்க மேலயும் சந்தேகம் வரலை... வெளியிலிருந்து யாரோ வந்துதான்... இந்தக் காரியத்தை பண்ணியிருக் கணும்ன்னு... குபேர்கிட்டே சொல்லிட்டார்."

நகுல் நெற்றியில் வியர்த்தான். "குபேர் இந்த பைப் காணாமே போன விஷயத்தை போலீசுக்கு கொண்டு போகமாட்டார்ன்னு நான் நினைச்சேன்... ஏன்னா கறுப்புப் பணத்தை வைரங்களா மாத்திதான்... பைக்குள்ளே மறைச்சு வைச்சிருக்கிறதா கணக்கு போட்டுட்டேன்..."

"நகுல்..."

"ம்..."

"இப்படி... நீங்க... என்னை ஏமாத்தினது சரியில்லை..."

நகுல் சிரித்தான் "உன்கிட்டே உண்மையைச் சொல்லியிருந்தா... எனக்கு உதவி பண்ணி யிருப்பியா...?" நிச்சயமா பண்ணியிருக்கமாட்டே...

"நகுல்! இந்த திருட்டுத்தனம் நமக்கு வேண்டாம்... இது பெரிய விவகாரம்! போலீஸ் வைரங்களை கண்டுபிடிக்கிற முயற்சியில் மும்மரமா இறங்கியிருக்காங்க. டெல்லி போலீசைப் பத்தித்தான்... உங்களுக்குத் தெரியுமே... அவங்க உண்மையை



கண்டுபிடிக்காமே விடமாட்டாங்க..."

"சரி. இப்ப என்ன பண்ணலாங்கிறே?"

"இந்த வைரங்களை போலீசிலே ஒப்படைச்சுடலாம்."

"எப்படி? நேர்ல போயா?"

"நான் அப்படி சொல்வேனா? ஒரு குறிப்பிட்ட இடத்துல வைச்சுட்டு போலீசுக்கு போன் பண்ணி செல்லிவிட்டால். அவங்க வந்து எடுத்துக்கிட்டு போயிடுவாங்க."

"கல்பகா... அந்த வைரங்களோட மதிப்பு எவ்வளவு தெரியுமா? ஒரு கோடி ரூபாய்! சென்னையில் இதை வாங்கிக்கிறதுக்காக பார்ட்டி ரெடியா காத்திட்டிருக்காங்க. கை மாறினால் போதும். பணம்!"

"வேண்டாம் நகுல். போலீஸ்ல மாட்டிகிட்டா... வீணா நம்ம இரண்டு பேரோட வாழ்க்கை நாசமாயிடும்."

"போலீஸ் கையில் மாட்டினாத்தானே?"

"போலீஸ் விடமாட்டாங்களே..."

"இதோ பார் கல்பகா! போலீசை எப்படி ஏமாத்தறதுன்னு எனக்கு நல்லாவே தெரியும். நாளைக்கு மறுநாள் இந்த வைரங்கள் கைமாறி வெளிநாட்டுக்குப் போயிடும். அப்புறம் நமக்கு கவலையில்லை."

"நோ! இந்த வைரங்களோடு நீங்க சென்னைக்குப்

போக விடமாட்டேன்."

நகுல் சிரித்தான். "என்ன பண்ணப் போறதா உத்தேசம்?"

"போலீசுக்கு போய் நான் எல்லா உண்மைகளையும் சொல்லிடப் போறேன்."

"கல்பகா! உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிருக்கா?"

"பைத்தியம் எனக்கு பிடிக்கலைங்க. உங்களுக்குத்தான் பிடிச்சிருக்கு. பணப் பைத்தியம்! ஒரு சாதாரண புகை பிடிக்கிற பைப்தான்னு சொல்லி என்னை ஏமாத்திட்டீங்க. அந்த பைப்பை திரும்பவும் கொடுத்துடுங்க. குபேர் பங்களாவிலேயே கொண்டு போய் வைச்சுடறேன்."

காரின் வேகத்தைக் குறைத்து ரோட்டோரமாய் நிறுத்தினான் நகுல். "கல்பகா இது திருட்டு இல்லை. நம்மை தேடி வந்த அதிர்ஷ்டம். வைரங்கள் கைமாறினால் என்னோட பங்குக்கு ஐம்பது லட்சம் வரும். அதை வைச்சுகிட்டு நீயும் நானும் எவ்வளவு சந்தோசமா..."

"அந்த திருட்டு சந்தோசம் எனக்கு வேண்டாங்க. நீங்க சம்பாதிச்ச பணம் உழைப்பாலே வந்ததா இருக்கணும். அதான் எனக்கு சந்தோசம்."

"சினிமாவுல வர்ற கதாநாயகி பேசற மாதிரி பேசிட்டிருக்காதே கல்பகா. கொஞ்சம் யோசிச்சு பாரு. ரூபா ஐம்பது லட்சம். நான் ஆயுசு பூரா உழைச்சாலும் இவ்வளவு பணத்தை சம்பாதிக்க முடியுமா?"



"நீங்க என்ன சொன்னாலும் சரி, நான் ஒத்துக்கவே மாட்டேன். அந்த பைப்பை என்கிட்ட கொடுத்துடுங்க. நான் குபேர் அறையில் கொண்டுபோய் போட்டுடறேன்."

"கல்பகா! நான் சொல்வதைக் கொஞ்சம்..."

"நீங்க எதுவும் சொல்ல வேண்டாம், அந்த பைப்பை எடுங்க."

"அ... அது... இப்ப... ஒரு நண்பன்கிட்டே இருக்கு."

"வாங்கிக் கொடுங்க."

"நாளைக்கு வாங்கித் தர்றேனே?"

"இப்பவே எனக்கு வேணும்."

"சரி. வா. வாங்கித் தர்றேன்" விஷமப் புன்னகையோடு சொன்ன நகுல் காரை 'விருட்'டென்று நகர்த்தி வேகமாய் விரட்டினான்.

## 8

போலீஸ் கண்ட்ரோல் அறைக்கு - அந்த நடுநிசி வேளையில் டெலிபோன் வந்தது. தூக்க கலக்கத்தைப் போக்க 'பான்' வெத்திலை மென்று கொண்டிருந்த போலீஸ் அதிகாரி ரீசிவரை எடுத்தார்.

"அலோ..."

"போலீஸ் கண்ட்ரோல் அறையா?"

"ஆமாம்."

"சுந்தர் நகர் ஜீபாலஜிகல் பார்க்கிலிருந்து

பேசறோம். நான் பார்க் வாட்ச்மேன் கன்யாலால்..."

"சரி, என்ன விஷயம்?"

"அரை மணி நேரத்துக்கு முந்தி பார்க்கைச் சுத் 'பாரா' வந்தேன். பார்க்கோட வடக்குப் பகுதியில். ஒரு பொண்ணு கழுத்து நெறிபட்டு பிணமா கிடந்தா..."

"பொண்ணுக்கு என்ன வயசு இருக்கும்?"

"சின்ன வயசுதான். இருபது இருக்கலாம்."

"பாடிக்கு பக்கத்துல யாரையும் அனுமதிக்க வேண்டாம். இப்ப போலீஸ் வரும்."

"எஸ்... சார்."

அதிகாரி எழுந்து இண்டர்காம் ரிசீவரை எடுத்து. சம்பந்தப்பட்ட டிபார்ட்மெண்டுக்கு தகவலை அனுப்ப. அடுத்த ஐந்தாவது நிமிடம் ஒரு இன்ஸ்பெக்டரும். சப்-இன்ஸ்பெக்டரும் நான்கைந்து போலீசோடு புறப்பட்டார்கள். பத்தே நிமிடம். பார்க் வந்தது. இறங்கி உள்ளே போனார்கள்.

அந்த ஜுபாலஜிகல் பார்க்கின் வடக்குப் பகுதியில் காம்பவுண்டு சுவருக்குப் பக்கத்தில் - காய்ந்து போன செடிகளுக்கு நடுவே - கல்பகா கழுந்து நெறிபட்டு - வாயில் ரத்தம் தள்ளி இறந்து கிடந்தாள். வலது கண் பிதுங்கியிருந்தது. நாக்கு பற்களுக்கு இடையில் துணியூண்டு எட்டிப் பார்த்தது.

இன்ஸ்பெக்டர் டார்ச் வெளிச்சத்தில் அவளை நனைத்துப் பார்த்துவிட்டு வாட்ச்மேனிடம் திரும்பினார்.



"ரத்தம் உறைஞ்சிருக்கிறதைப் பார்த்தால்... சம்பவம் நடந்து மூணு மணி நேரத்துக்கு மேலே ஆயிருக்கும் போல் தெரியுது. உனக்கு எந்தவிதமான அலறல் சத்தமும் கேட்கலையா?"

"கேட்கலை சார்."

"இந்தப் பொண்ணை இதுக்கு முந்தி நீ பார்த்திருக்கியா?"

"இல்ல சார்."

"சேலை கட்டியிருக்கிற அமைப்பைப் பார்த்தால் தமிழ்நாட்டு பெண் மாதிரி தெரியுது! கான்ஸ்டபிள்!"

"சார்..."

"ஜாக்கெட்டுக்குள்ளே பர்ஸ் வெச்சிருக்காளான்னு பாரு."

கான்ஸ்டபிள் ரத்தம் தோய்ந்து போயிருந்த மேலாடையை விலக்கி. ஜாக்கெட்டுக்குள் சோதித்துப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார்.

"எதுவுமில்லை சார்."

"பொண்ணு அழகாயிருக்கா. ஏதாவது கற்பழிப்பு சமாச்சாரமா இருக்கலாம்."

வாட்ச்மேன் குறுக்கிட்டு சொன்னான். "சார்! கொஞ்ச நாளாவே இந்த பார்க்கில் - சில பேர் பெண்களை கூட்டிட்டு வந்து. தகாத முறையில் இருந்துட்டு போறாங்க. அப்படி வந்தவங்களில் யாராவது இந்தக் கொலையைப் பண்ணியிருக்கலாம்."

இன்ஸ்பெக்டா தன் தாடையைக் கீறினார்.

# 9

மறுநாள் இரவு பத்து மணி.

தன் அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு - பீர் பாட்டிலை காலி செய்துகொண்டிருந்த நகுல் எழுந்து போய் கதவைத் திறந்தான். ஆச்சரியப்பட்டான்.

வாசலில் -

சாம்பமூர்த்தி நின்றிருந்தான்.

"அட... நீயா? என்ன சென்னையிலிருந்து திடீர்னு புறப்பட்டு வந்திருக்கே?"

சாம்பமூர்த்தி உள்ளே வந்தான்.

"போலீஸ்ல நீ மாட்டிக்கக்கூடாதுன்னுதான்..."

"என்ன சொல்றே?"

"சென்னை விமான நிலையத்திலேயும் சரி, டெல்லி விமான நிலையத்திலேயும் சரி, கஸ்டம்ஸ் அதிகாரிகளோட கெடுபிடி அதிகமாயிடுச்சு. அதுவும் குபேரோட வைரங்கள் காணாமல் போனதும், கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு ஒரு ரகசிய சுற்றறிக்கையே போயிருக்கு. தீவிர கண்காணிப்பு அதிகாரிகள் இதுக்காக ஸ்பெஷலா நியமனம் பண்ணியிருக்காங்க. வைரங்கள் உடம்போட எந்த பாகத்தில் மறைச்சு வைக்கப்பட்டிருந்தாலும் சரி, அதை கண்டுபிடிக்கக்கூடிய டைமண்ட்ஸ் டிடெக்டர்ஸ் கைவசம் வைச்சிருக்காங்க. சந்தேகப்படற எந்த பயணிகளையும் தனியறைக்கு கூட்டிப்போய் நிர்வாணமா உறிச்சு பார்த்துடறாங்க."



நகுல் முகம் மாறியது.

"ஏற்பாடுகள் இவ்வளவு தீவிரமா இருக்கிறது உனக்கெப்படி தெரியும்?"

"விமான நிலையத்தில் பணியாற்றும் நம்ம ஆள் ஒருத்தன் சொன்னான். இந்த ஏற்பாடுகள் பண்ணியிருக்கிறது தெரியாமே நீபாட்டுக்கு ஏர்போர்ட்டுக்கு போயிட்டியானா ஆபத்தாச்சேன்னுதான் டெல்லி விமானத்தைப் பிடிச்சு வந்தேன்."

"அப்படீன்னா வைரங்களை சென்னைக்கு எப்படி கொண்டு போறது?"

"யோசிக்கணும்."

"யோசனையே வேண்டாம் சாம்பமூர்த்தி. கஸ்டம்ஸ் அதிகாரிகளின் கெடுபிடி தளர்கிற வரைக்கும் வைரங்கள் இங்கேயே இருக்கட்டும்."

"அதுல ஒரு சிக்கல் இருக்கே?"

"என்ன?"

"வைரங்களை ஒரு கோடி ரூபாய் கொடுத்து வாங்கிக்கப் போகிற ரெண்டு வெளிநாட்டு ஆசாமிகளுக்கும் இன்னியிலிருந்து மூணாவது நாள் விசா காலாவதியாகுது. அவங்க உடனே இந்தியாவைவிட்டு வெளியேறியாகணும். இன்னும் இரண்டு நாளைக்குள்ளே வைரங்கள் அவங்க கைக்கு போய்ச் சேரணும். இல்லேன்னா வியாபாரம் போச்சு."

"என்ன சாம்பமூர்த்தி. வந்ததிலிருந்து ஒவ்வொரு குண்டா தூக்கிப் போடறே?"

"நிலைமை அப்படி."

"இவ்வளவு கெடுபிடி இருக்கும்போது. வைரங்களை எப்படி சென்னைக்கு கொண்டுட்டு போறது?"

சாம்பமூர்த்தி அங்கிருந்த கட்டிலில் உட்கார்ந்தான். "அதைப்பத்தி யோசிக்கிறதுக்கு முன்னாடி உன்கிட்ட சில கேள்விகள்..."

"என்ன?"

"வைரங்கள் இருந்த குபேர் பைப் உன் கைக்கு எப்படி வந்தது? இந்த விஷயத்தில் உனக்கு உதவி பண்ணியது யார்?"

"சிம்பிள்" சிரித்தான் நகுல். "கல்பகா" என்கிற ஒரு நர்சை நான் காதலிக்கிற விஷயத்தை உன்கிட்ட முன்னாடியே ஒரு தடவை சொல்லியிருக்கேன். ஞாபகமிருக்கா?"

"அந்தப் பொண்ணுதான் நோய்வாய் பட்டிருந்த குபேருக்கு நர்சா இருக்கா. நீ வைரங்களைப் பற்றி சொன்ன நேரமும் அவள் அந்த வீட்ல நர்சா இருந்த நேரமும் பொருந்தி போகவே. காரியம் சுலபமா முடிஞ்சது."

"அவள் எப்படி ஏத்துக்கிட்டா?"

அவளை சரிகட்டிய விதத்தை சொன்னான் நகுல். சாம்பமூர்த்தி பிரமிப்பாய் கேட்டுவிட்டு. அவன் தோளை



தட்டிக் கொடுத்தான்.

"நீ கில்லாடிதான்! ஆனால் அவளுக்கு உண்மை தெரியும்போது உன் பாடு கஷ்டமாப் போயிடுமே?"

"அவளுக்கு உண்மை தெரியாது."

"எப்படி அவ்வளவு உறுதியா சொல்றே?"

"அவள் உயிரோடு இருந்தால்தானே. உண்மை தெரிஞ்சுக்குவா?"

"அப்படின்னா?"

"ஜுவாலஜிகல் பார்க்குக்கு கொண்டுபோய் காரியத்தை முடிச்சுட்டேன்."

"உத்தமமான காரியம்தான்."

"பேப்பரைப் பாரு" டெல்லி தமிழ் பேப்பர் ஒன்றை டீபாயின் மேலிருந்து உருவி காட்டினான். சாம்பமூர்த்தி வாங்கிப் பார்த்தான்.

ஜுவாலஜிகல் பார்க்கில் பிணமாய் கிடந்த பெண்

அடையாளம் தெரிந்தது

இதுபற்றி கூறப்படுவதாவது - "நேற்றைக்கு இரவு ஜுவாலஜிகல் பார்க்கில் கழுத்து நெறிபட்டு கிடந்த பெண் யார் என்ப இப்போது போலீசாருக்கு தெரிய வந்துள்ளது. அந்தப் பெண்ணின் பெயர் கல்பகா. வயது இருபத்தியொன்று. டாக்டர் வாகீசனின் நர்சிங்ஹோமில் நர்சாய் பணிபுரிந்து வந்தாள். தன் அப்பாவோடும் தம்பியோடும் ராஜேந்திரா நகர் பிளாட் ஒன்றில் வசித்து வரும் கல்பகா ஒரு தமிழ்ப் பெண். இரண்டு நாட்களுக்கு

முன்பு - குபேர் வீட்டில் நடைபெற்ற வைரங்கள் திருட்டு சம்பந்தமாய் இந்தக் கொலை நடந்திருக்கக்கூடும் என்று போலீஸார் சந்தேகப்படுகிறார்கள்."

சாம்பமூர்த்தி திடுக்கிட்டு நகுலைப் பார்த்தான். "என்ன... பேப்பர் செய்தியில் கடைசி வரி சரியில்லையே... உனக்கு பாதகமாயிருக்கும் போலிருக்கு."

"அது எனக்கு பாதகமில்லை. நானும அந்த கல்பகாவும் காதலிச்சிட்டிருந்தது யாருக்கும் தெரியாது."

"அவள் யார்கிட்டயாவது சொல்லியிருந்தால்...?"

"யார்கிட்டேயும் சொல்லக்கூடாதுன்னு அவளே என்கிட்ட சத்தியம் வாங்கியிருக்கும்போது. அவள் சொல்லியிருப்பாளா என்ன?"

"நீ அவசரப்பட்டு அவளைத் தீர்த்திருக்கக் கூடாது. நகுல்! நல்லமுறையில் பேசி அவளை நம்ம வழிக்கு கொண்டு வந்திருக்கணும்."

"நான் எவ்வளவோ இதமா சொல்லிப் பார்த்தேன். அவள் கேக்கலை. அதுக்கப்புறம்தான் அவளோட கழுத்தை பிடிச்சேன்..."

"சரி. அந்த வைரங்களை காட்டு பார்க்கலாம்."

நகுல் எழுந்து போய் சுவரில் பொருத்தியிருந்த வாஷ் பேசின் குழாயைத் திருகி, அதன் டேப்பை கையோடு கழற்றி எடுத்து பின் அதற்குள் திணித்திருந்த பாலீதின் கவரை எடுத்தான்.



"சாம்பமூர்த்தி உன்னோட உள்ளங்கையை நீட்டு"

அவன் நீட்ட - நகுல் வைரங்களை கொட்டினான. சாம்பமூர்த்தியின் உள்ளங்கை பிரகாசமாய் ஒளிர்ந்தது.

"ஆகா... அற்புதம்! கொஞ்ச நேரம் இமைக்காமலே பார்த்துட்டிருந்தா கண் பார்வையே போயிடும் போலிருக்கே..."

"சாம்பமூர்த்தி..."

"ம்..."

"இப்பவாவது உண்மையைச் சொல்லு."

"என்ன உண்மை?"

"இந்த வைரங்கள் குபேர்கிட்ட பைப்பில் இருக்கிற விஷயத்தை உனக்கு சொன்னது யாரு?"

"அந்த வெளிநாட்டு பார்ட்டிதான்."

"அவங்களுக்கு எப்படி தெரிஞ்சது?"

"குபேரோட மகன் ஒருத்தன் அமெரிக்காவில் படிச்சிட்டிருக்கான். மகனும் அப்பனும் டெலிபோன் பேசும்போது நம்ம பார்ட்டி எதேச்சையா ஒட்டு கேட்டிருக்கான். இது போதாதா? சாம்பமூர்த்தி பேசிக் கொண்டிருக்கும் போதே-

"டொக்... டொக்..."

கதவு தட்டப்பட்டது.

# 10

வைரங்களை சட்டென்று பாலிதீன் பைக்குள் போட்டான் சாம்பமூர்த்தி. கண்களில் பயம் தடவியிருக்க நகுலை ஏறிட்டான்.

"கதவைத் தட்டறது யாரு?"

"காரை சர்வீசுக்கு கொடுத்துட்டு போன ஆள் எவனாவது வந்திருப்பான்" சொல்லிக் கொண்டே வைரங்கள் இருந்த பாலிதீன் பையை வாஷ்பேசின் டேப்புக்குள் திணித்து . திருகி டேப்பை பழைய நிலைமைக்கு கொண்டுவந்தபின் போய் கதவைத் திறந்தான்.

வெளியே -

வின்செண்ட் நின்றிருந்தான்.

"அடடே! வின்செண்ட்... வா வா."

அவன் உள்ளே வந்தான். "இந்தப் பக்கமா வேலை இருந்தது. திடீர்னு உன்னோட ஆட்டோ காரேஜ் போர்டைப் பார்த்தேன். கதவைத் தட்டிட்டேன். சாரி... தொந்தரவு கொடுத்துட்டேனா?"

"நோ... நோ" வின்செண்ட்டுக்கு நாற்காலியைக் காட்டிவிட்டு. சாம்பமூர்த்தியிடம் திரும்பினான்.

"இவன் என்னோட பள்ளிக்கூட. கல்லூரி நண்பன். பேரு வின்செண்ட்."

இருவரும் கை குலுக்கிக் கொண்டபின். நகுல்



தொடர்ந்தான். "வின்செண்ட்டும் அவனுடைய மனைவி மீனாவும் ரொம்ப விநோதமான பாத்திரங்கள். தொழில் என்ன தெரியுமா? பர்னிஸ் லிப்ஸ் என்கிற கலைநிகழ்ச்சிதான்."

"டான்ஸ் மியூசிக்கா?"

"இல்லை. இது வேற மாதிரி. வின்செண்ட்டோட மனைவி மீனா. அமிலத்தை காப்பி சாப்பிடற மாதிரி சாப்பிடுவாங்க. காண்ணாடி பீங்கான் துண்டுகளை விழுங்கி - ஒரு மணி நேரம் கழிச்சு - அதையே வெளியே எடுத்து காட்டுவாங்க. இதுமாதிரி சின்ன சின்ன அற்புதங்கள்..."

"அமிலத்தை சாப்பிடறதா...?"

"ஆமா..."

"ஆச்சரியமாயிருக்கே...? உண்மையாகவே அமிலம்தானா?" சாம்பமூர்த்தி கேட்க - வின்செண்ட் புன்னகைத்தான். "அது அமிலம்தான்...! நிகழ்ச்சி நடக்கிறப்ப... அதை யார் வேணும்னாலும்... வந்து... டெஸ்ட் பண்ணிக்கலாம்... அதே மாதிரிதான் விழுங்கப்போகிற பீங்கான் துண்டுகளையும்... யார் வேணுமானாலும் கையிலெடுத்து பார்கலாம்..."

சாம்பமூர்த்தி விழிகளை விரித்தான். "அமிலத்தை சாப்பிடறது கண்ணாடி துண்டுகளை விழுங்கறது... இதெல்லாம் எப்படி சாத்தியம்...?"

"சாத்தியம்தான்..."

"வயித்தை ஒண்ணும் பண்ணாதா...?"

"எதுவும் பண்ணாது... வர்ற ஞாயிற்றுக்கிழமை ரீகல் சர்க்கிள் ஹாலில்... எங்க 'உதடுகள் சுடும்' நிகழ்ச்சி இருக்கு...நகுல் வர்றேன்னு சொல்லியிருக்கான்...நீங்களும் அவன் கூட வாங்க... நிகழ்ச்சியை பாருங்க. இன்னும் அதிகமா ஆச்சிரியப்படுவீங்க..."

நகுல் வின்செண்ட்டின் தோளைத் தட்டினான்.

"பீர் சாப்பிடறியா...?"

"கொடுத்தா சாப்பிடறேன்..."

வின்செண்ட் பீர் சாப்பிட்டு - இரண்டு சிகரெட்டுகளை புகையாக்கியபின் - விடைபெற்று போன பின் சாம்பமூர்த்தி நகுலை ஏறிட்டான்.

"நகுல்! வின்செண்ட் ஆள் எப்படி...?"

"எதுக்கு கேட்கிறே...?"

"பணத்துக்கு மசிவானா...?"

"மசியாமே என்ன...? ஏன்... என்ன விஷயம்...?"

"வின்செண்ட்டையும் அவனோட மனைவி லீனாவையும் உபயோகப்படுத்தி - நம்மகிட்ட இருக்கிற வைரங்களை சென்னைக்கு சுலபமா கடத்திடலாம்..."

"டேய்... நீ என்ன சொல்றே...?"

"வின்செண்ட்டோட மனைவி லீனா பீங்கான் துண்டுகளை விழுங்கி ஒரு மணி நேரம் கழிச்சி...



வெளியே எடுக்கக்கூடியதுதானே...?"

"ஆமா..."

"பீங்கான் துண்டுகளுக்கு பதிலா நம்ம வைரங்களை விழுங்க வைச்சு... சென்னைக்கு விமானத்தில் கூட்டிட்டு போய்... அங்கே அதை வெளியே எடுத்து - பார்ட்டிக்கு கொடுத்துடலாமே...?"

நகுல் யோசனையில் விழுந்தான்.

"என்ன... என்னோட திட்டம் எப்படி...?"

"திட்டம்... ஓ.கே.தான்... ஆனால்..."

"என்ன... ஆனால்..."

"வின்செண்ட்டும் அவனோட மனைவியும் இந்த திட்டத்துக்கு ஒத்துக்கணுமே..."

"உனக்கு அவன் நண்பன்னு சொல்றே...? பணத்தாலே அடி... மசியாமே போயிடுவானா...?"

"அஞ்சு லெட்சம் தர்றதா சொல்லலாமா...?"

"சொல்லு... இன்னும் அதிகமா கேட்டாலும் கொடுக்கறேன்னு... ஒத்துக்க..."

"நாளைக்கு காலையில போய் அவன் வீட்ல வைச்சே பேசிடட்டுமா...?"

"ம்..."

தலையாட்டினான் சாம்பமூர்த்தி.

# 11

மறுநாள் காலை. ஏழு மணி.

வின்சென்ட் வீட்டின் உள் அறை. நகுல் சொன்னதைக் கேட்டு - வின்சென்ட்டும், லீனாவும் மலைத்துப் போயிருந்தார்கள்.

"வைரங்களைக் கடத்தறதா...?" லீனாவின் வாய் - திரும்ப திரும்ப 'அதே வாக்கியத்தை' அதிர்ச்சியாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. நகுல் புன்னகைத்து இனிப்பான குரலில் சொன்னான். "இதோ பாருங்க சிஸ்டர்... உங்களைப் பொறுத்தவரைக்கும் இது சுலபமான வேலை... டெல்லியில் வைரங்களை விழுங்கறீங்க... சென்னைக்குப் போனதும்... உங்ககிட்ட இருக்கிற திறமையை வைச்சு - அந்த வைரங்களை எங்களுக்கு எடுத்து கொடுக்கிறீங்க... அவ்வளவுதான்... உடனடியா உங்க கைக்கு... அஞ்சு லெட்சம் கிடைக்கும். நீங்களும் உங்க கணவரும் ஊர் ஊரா போய் - 'பர்னிங் லிப்ஸ்' நிகழ்ச்சியை நடத்தி ஆயிரம், இரண்டாயிரம்ன்னு சம்பாதிக்கிறதை மூணு மணி நேர பயணத்தில் - அஞ்சு லெட்ச ரூபாயை பார்த்துடலாமே...!"

லீனா கணவனைப் பார்க்க - அவன் நகுலை பயப் பார்வை பார்த்தான். "நீ சொல்றதெல்லாம் சரிதான் நகுல்... இவ்வளவு பணத்தை எங்க ஆயுசுல நாங்க பார்க்க முடியாதுதான் ஆனால்..."



"என்ன ஆனால்...?"

"யாருக்காவது விஷயம் தெரிஞ்சு கஸ்டம்ஸ் கண்டுபிடிச்சிட்டா...?"

"யாருக்கும் வெளியே... இது தெரியாது... எனக்கும் சாம்பமூர்த்திக்கு மட்டும்தான் இந்த விஷயம் தெரியும்..."

"எனக்கென்னமோ பயமாயிருக்கு நகுல்..."

"நீ எதுக்கும் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை வின்சென்ட்! கொஞ்சம் நிதானமா யோசிச்சு பாரு... உன்னோட மனைவி லீனாவுக்கு... பட்டாணி வடிவில் இருக்கிற பதினோரு வைரங்களை விழுங்கி... ஒரு மூணு மணி நேரம் பயணம் செய்து - சென்னை வந்து சேர்ந்ததும், வைரங்களை வெளியே எடுத்து தர்ற சுலபமான வேலைதான் நிம்மதியா போயிட்டு நிம்மதியா வந்துடலாம்... பணம் ஐந்து லெட்சம் போதாதுன்னா... சாம்பமூர்த்திகிட்டே சொல்லி கொஞ்சம் சேர்த்தே வாங்கித் தர்றேன்..."

வின்சென்ட் தன் மனைவியிடம் வியர்வை முகமாக திரும்பினான். "லீனா...' நீ என்ன சொல்றே...?"

அவள் தோள்களை குலுக்கினாள். "இந்த திட்டம் எனக்கு சரியாகத்தான் படுது... கஸ்டம்ஸ் அதிகாரிகள் கிட்டே மாட்டிக்க வழியே இல்லை..."

"அப்படீன்னா... ஒத்துக்கலாம்ன்னு சொல்றியா...?"

"தாராளமா...! ஆனால் நகுல் சொன்ன ரேட்

காணாது. புதிய ரேட் பேசிக்கணும்..."

"மிசஸ் லீனா! உங்களுக்கு எவ்வளவு வேணும் சொல்லுங்க..."

"பத்து லெட்சம்..."

"தர்றேன்..."

"அட்வான்சு...?"

"இங்கே ஒரு லெட்சம் கொடுத்துடறேன்... சென்னை போய் சேர்ந்து வைரங்கள் கைக்கு வந்ததும்... மீதி ஒன்பது லெட்சம்..."

வின்செண்ட் சொன்னான். "நகுல்! உன்னைப் பத்தி எனக்குத் தெரியும்... ஆனால் உன்னோட கூட்டாளிகளைப் பத்தி எனக்குத் தெரியாது... பணத்தை கொடுக்கிற விஷயத்தில் அவங்க நேர்மையா இருப்பாங்களா...?"

"பணத்துக்கு நான் பொறுப்பு போதுமா...?"

"சரி...திட்டம் எப்போ ஆரம்பம்...?"

"திட்டத்தைப் பற்றியும்... நீங்க நடந்துக்க வேண்டிய முறைகளைப் பற்றியும்... சாம்பமூர்த்தி தெளிவா சொல்வான்... இன்னிக்கு மத்தியானம் மூணு மணிக்கு என்னோட ரூமுக்கு வர்றீங்களா...?"

"ரூமுக்கெல்லாம் வேண்டாம் நகுல்... ஒரு பொதுவான இடத்துல சந்திச்சு பேசலாம்..."

"எங்கே வைச்சு பேசலாம்... நீயே சொல்லு..."



"சாயந்தரம் ஆறு மணிக்கு சாணக்யா திறந்தவெளி ஓட்டலுக்கு போயிடலாம். கூட்டமில்லாத ஓட்டல்... நிம்மதியா பேசலாம்..."

"ஓ.கே. ஆறு மணிக்கு... சாணக்யா ஓட்டல்லை சந்திப்போம்" சொன்ன நகுல் எழுந்துகொண்டான்.

## 12

டெல்லி போலீஸ் கமிஷனர் முன்பு இன்ஸ்பெக்டர் திவாரி நின்றிருந்தார். கையில் கல்பகா கொலை விசாரணை சம்பந்தப்பட்ட பைல்.

கமிஷனர் கேட்டார்.

"கல்பகாவோட குடும்பத்தில் யார் யார் இருக்காங்க...?"

"அவளோட அப்பாவும்... தம்பியும்தான் சார்..."

"விசாரணையில் அவங்க என்ன சொன்னாங்க...?"

"உபயோகமான தகவல் எதுவும் கிடைக்கலை சார்... சம்பவம் நடந்த அன்னிக்கு... குபேர் வீட்டிலிருந்து எட்டு மணிக்கு புறப்பட்ட கல்பகா... தன்னோட வீட்டுக்குக்கூட போகாமே வேற எங்கேயோ போயிருக்கா... அவள் யாரை பார்க்கப் போனாங்கிற விவரம்... வீட்ல இருக்கிற யாருக்கும் தெரியலை..."

"குபேர் வீட்ல நடந்த வைரத் திருட்டுக்கும் அந்தப் பெண் கல்பகாவுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கலாம்ன்னு சொன்னீங்க..."

"ஆமா... சார்..."

"அதுக்கு ஆதாரமா... ஏதாவது தகவல்கள் கிடைச்சிருக்கா...?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஒரு தகவல் கிடைச்சது சார்..."

"என்ன...?"

"குபேர் வீட்ல வேலை செய்யற வேலைக்காரன் ஒருத்தன் கல்பகாவைப் பற்றி ஒரு புதுத் தகவல் சொன்னான். அதாவது... வைரத் திருட்டு நடந்த அன்னிக்கு மத்யானம் கல்பகா... இரண்டரை மணி சுமாருக்கு... பங்களாவின் பின்பக்கமா போயிருக்கா..."

"எதுக்கு...?"

"தெரியலை சார்... ஆனால் என்னோட கணிப்பு இதுதான்...! குபேரின் ஜிப்பா பாக்கெட்டிலிருந்து - வைரங்கள் இருந்த பைப்பை எடுத்தது கல்பகாதான். அதை எடுத்த உடனே... பங்களாவுக்கு பின்பக்கமா போய் - அங்கே காத்திட்டிருந்த யாரிடமோ கொடுத்திருக்கா..."

கமிஷனர் யோசனையாய் தன் மூக்கை சுரண்டினார்.

"மிஸ்டர் திவாரி... நீங்க சொல்லுவது சரியாக இருக்கலாம். கல்பகாவுக்கும் அந்த வைரத் திருட்டுக்கும் சம்பந்தம் இருந்திருக்கணும். குபேர் வழக்கமா இரண்டு மணிக்கு படுத்து நாலு மணி வரைக்கு தூங்குறவர்...



பவம் நடந்த அன்னிக்கு அஞ்சு மணி வரைக்கும் ங்கியிருக்கார். நர்ஸ் கல்பகா ஒரு தூக்க த்திரையை பழரசத்தில் கலந்து கொடுத்திருக்க ய்ப்பு இருக்கு... அவர் தூங்கின பிறகு - ப்பைஎடுத்து- பங்களாவுக்கு பின்பக்கமா போய் ங்கே காத்திருந்த யாரிடமாவது கொடுத்திருக்கலாம்... வரங்கள் கைக்கு வந்ததும் அந்த நபர் கல்பகாவை ந்து கட்டியிருக்கலாம்...! மிஸ்டர் திவாரி... கல்பகா லை பார்த்த ஆஸ்பத்திரியில் விசாரணையை த்தினீங்களா?"

"நடத்தினேன் சார்... கல்பகாவைப் பத்தி யாருக்கும் ான தகவல்கள் தெரியலை... டாக்டர் வாகீசன் டும் கல்பகா ரொம்பவும் அமைதியானவள்னு ன்னார்..."

"அவளுக்கு ஏதாவது காதல் விவகாரம்...?"

"இருந்த மாதிரி தெரியலை சார்..."

## 13

ஓட்டல் சாணக்யா.

மாலை மணி ஏழு. விளக்கு வெளிச்சத்தில் - திறந்த வெளியில் - வட்ட மேசைகள் சென்னை ினேஷன் மினுமினுப்பில் தெரிய - சுற்றிலும் வினேல் நாற்காலிகள் நிறம், நிறமாய் கண்களில் ின. புல்வெளியில் இடதுபக்க மூலையில் இருந்த சையைச் சுற்றிலும், நகுல், சம்பமூர்த்தி, வின்சென்ட்,

லீனா உட்கார்ந்திருக்கார்கள். கைகளில் இருந்த மு கரண்டிகள் - தட்டில் இருந்த பதார்த்தங்களை குத் கொண்டிருந்தது.

கட்லெட்டின் தலையில் தக்காளி ஜாமை ஊற் அதை முள் கரண்டியால் குத்திக்கொண்டே வின்செண்ட்டையும், லீனாவையும் பார்த்த சாம்பமூர்த்தி சொல்லிக் கொண்டிருந்தான்.

"நாளைக்கு காலை பத்து மணிக்கு நம சென்னைக்கு விமானம். எட்டு மணிக்கு நகுல் ரு எல்லாரும் சந்திக்கிறோம்... மிசஸ் லீனா வைரங்க விழுங்கியதும்... நாலும் பேரும் ஒரு டாக்சி ஏர்-போர்ட்டுக்கு புறப்பட்டு போறோம்... கஸ்டம் அதிகாரிகள் என்னதான் முயற்சி பண்ணினாலும் லீனா விழுங்கியிருக்கிற வைரங்களை அவங்களா கண்டுபிடிக்க முடியாது... சென்னைக்கு நாலு மணி பயணம். தடங்கள் இல்லாமே போய் சேர்றோ சென்னை கஸ்டம்சையும் ஏமாத்திட்டு என்னே வீட்டுக்கு போறோம்... அங்க லீனா வைரங்க வெளியே கொண்டு வர திட்டம் ஓவர். பேசின ப உங்க கைகள்ல..."

வின்செண்ட் கேட்டான். "இதில் எந்த மாற் இல்லையே?"

"இல்லை..."

"எனக்கொரு சந்தேகம்" என்றான் நகுல்.

"என்ன?"



"லீனா வைரங்களை விழுங்கவும், அந்த வைரங்களை மறுபடியும் எடுக்கவும் எவ்வளவு நேரமாகும்?"

லீனா நகுலைப் பார்த்து புன்னகைத்தாள். விழுங்கவும் சரி, அந்த வைரங்களை வெளியே எடுக்கவும் சரி, இரண்டே நிமிடம் போதும்."

"எப்படி சாத்தியம்? விழுங்குவதற்கு இரண்டு நிமிடம் போதும். ஆனால் அதை வெளியே எடுக்க நேரமாகும்."

வின்செண்ட் சிரித்தான். "லீனா வைரங்களை விழுங்கினால் அது வயித்துக்குள்ளே போகாது."

"பின்னே?"

"அவளுடைய கழுத்தின் இடது பக்கம் தொண்டைக் குழிக்குப் பக்கத்தில் அடக்கிக் கொள்வாள்."

நகுலும் சாம்பமூர்த்தியும் லீனாவைப் பிரமிப்பாய் பார்த்தார்கள். வியப்பாய் கேட்டார்கள். "அதெப்படி முடியும்?"

"அவளுடைய கழுத்தின் அமைப்பே அப்படித்தான். நேரத்தில் ஐம்பது பட்டாணிகளை தொண்டைக் குழிக்குப் பக்கத்திலேயே அவளால் அடக்கிக்கொள்ள முடியும். அவைகளை வெளியே கொண்டுவர - விக்கல் ஒரு சத்தத்தை எழுப்பினால் போதும். விழுங்கியவை வெளியே வந்துவிடும். நீங்கள் கொடுக்கப் போகும் வைரங்களையும் அப்படித்தான்

விழுங்கப் போகிறாள்."

சாம்பமூர்த்தி கைதட்டினான்.

"அற்புதம்..."

நகுல் கேட்டான். "இந்த அமிலம் குடிக்கிற வித் எப்படி?"

லீனா புன்னகைத்தாள். "அது தொழில் ரகசியம்

"இவ்வளவு நெருங்கிட்டோம். அந்த இரகசியத் சொல்லக் கூடாதா?"

"சொல்றேன். ஆனால் இதை வெளி யார்கிட்டேயும் சொல்லக் கூடாது."

"மாட்டோம்."

"எங்களோட உதடுகள் சுடும் நிகழ்ச்சி ஆரம்பமா முதல் காட்சியிலேயே நைட்ரிக் அமிலத்தை. மில்லி எடுத்து ஒரு கண்ணாடி கோப்பையில் ஊ மேடை மேல் இருக்கிற ஸ்டூல் மேல வைச்சிடுவே அதிலிருந்து ஒரு துணி, காகிதத்து மேல வி காட்டுவோம். அது கருகும். மேடைக்கு யாரா ஒருத்தரை கூப்பிட்டு டெஸ்ட் பண்ணச் சொல்லுவே அதே மாதிரி யாராவது ஒருத்தர் மேடைக்கு வ அதை டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டு அமிலம்தான் சொல்லுவார். நான் அமிலம் குடிக்கிற காட்சி எப்ப பத்து காட்சிகள் தள்ளித்தான் வரும். அதுவரைத் மேடையின் மேல் இருக்கும் ஸ்டூலில் அந்த அமி நிரப்பின கண்ணாடி கோப்பை இருக்கும்.



னவரோட மந்திர காட்சிகள் மேடையில் ந்திட்டிருக்கும்போதே - அவரோட உதவியாளர்கள் றுக்கும் நெடுக்கும் போகிறபோது, அந்த அமில கோப்பையை சாமர்த்தியமாய் எடுத்துவிட்டு. அமிலத்தின் நிறத்தில் இருக்கும் அன்னாசிபழச் சாறு ரம்பின கண்ணாடி கோப்பையை வைத்து டுவார்கள். இந்த கண்ணாடிக் கோப்பையை மாற்றுவது வெகு சாமர்த்தியமாய் நடக்கும். என் னவரின் மந்திரக் காட்சிகளில் மக்கள் லயித்து ரிக்கும்போது, விநாடி நேரத்திற்குள் நடந்துவிடும். இந்த மாற்றம் நிகழ்ந்ததுமே. அடுத்த காட்சி அமிலம் டிக்கும் காட்சிதான்."

"அற்புதம்!" நகுலும், சாம்பமூர்த்தியும் சிரித்தார்கள்.

னா தொடர்ந்தாள். "மக்களை இப்படி ஏமாத்தறது எனக்கு பிடிக்கலைதான். இருந்தாலும், எங்களுக்கு வேறு வழியில்லை."

"இனிமே நீங்க இப்படி மக்களை ஏமாத்தி கழ்ச்சியை நடத்த வேண்டியதே இல்லை. நாங்க ப்போகிற பத்து லட்சம் ரூபாயை வைச்சுகிட்டு வது ஒரு தொழிலை ஆரம்பிங்க."

"நாங்களும் அந்த முடிவுக்குத்தான் திருக்கோம்."

"திட்டம் அரங்கேற்றத்துக்கு அப்புறம் சின்னதா ஒரு தனை."

"என்ன?"

"திட்டம் நிறைவேறியதும் பணத்தை வாங்கிட்டு நீங்க உடனே கிளம்பிடணும். அதுக்கப்புறம் என்னையோ நகுலையோ சந்திக்கிற முயற்சியில் ஈடுபடக்கூடாது."

'சரி' என்கிற மாதிரி லீனாவும் வின்சென்ட்டும் தலைகளையாட்ட, சர்வர் ஐஸ்கிரீம் கிண்ணங்களோடு வந்தான். சாப்பிட்ட தட்டுக்களை எடுத்துவிட்டு ஐஸ்கிரீம் கிண்ணங்களை மேசையின் மே... பரப்பிக்கொண்டிருந்த விநாடி -

நகுலின் பார்வை எதேச்சையாய் திரும்ப -

பக்கவாட்டில் அந்த இன்ஸ்பெக்டர் தெரிந்தார். அவனை நோக்கி மெல்ல வரவும் ஆரம்பித்தார்.

நகுல் இதயத்துக்குள் பிரளயம்.

"சா... சாம்பமூர்த்தி..."

"என்ன?"

"போ...போலீஸ்..."

அவனும் திடுக்கிட்டான். "எ... எங்கே?"

"வலதுபக்கம் பாரு."

சாம்பமூர்த்தி திரும்பி பார்ப்பதற்குள் - இன்ஸ்பெக்டர் நகுலை நெருங்கியிருந்தார். அவன் தோளில் தட்டி கேட்டார் இந்தியில்.

"நீ ஆட்டோ கேரேஜ் நகுல்தானே?"

"ஆ...ஆமா... சார்..."



"டி.எல்.ஐ.6734 போலீஸ் ஜீப்பை சர்வீசுக்கு ...ட்டிருந்தோம்... சர்வீஸ் முடிஞ்சு வண்டி ...டியாயிடுச்சா...?"

நகுலுக்கு இயல்பாய் மூச்சு வந்தது. "அதுவா... ...ர்...! இன்னும் இரண்டு நாள் ஆயிடும்... வண்டியில் ...நிறைய டிரபுள் இருக்கு..."

"நாளைக்கு மறுநாள் வண்டி கிடைச்சுடுமா..."

"கண்டிப்பா... கிடைச்சுடும் சார்..."

இன்ஸ்பெக்டர் நகர்ந்து போக - சாம்பமூர்த்தி ...மாய் பெருமூச்சுவிட்டு நெஞ்சை நீவிக்கொண்டான். ...கொஞ்ச நேரத்துல அடிவயிறெல்லாம் கதிகலங்கி ...யாயிடுச்சு..."

## 14

மறுநாள் காலை எட்டு மணி. நகுலின் அறை.

வெல்வெட் துணியின் மேல் பரப்பப்பட்டிருந்த ...னோரு வைரங்களுக்கு முன்பாக லீனா ...ட்கார்ந்திருக்க - சுற்றிலும் இடதுகையில் நீர் நிரம்பிய ...ளரை வைத்துக்கொண்டு - ஒரு வாய் தண்ணீரை ...ட்டுக்கு கொடுத்து - ஒவ்வொரு வைரமாய் விழுங்கி ...தொண்டைக்கு இடது பக்கமாய் கையை அழுத்தி ...ழுத்தி அடக்கிக் கொண்டாள்.

"முடிஞ்சது..." சிரித்தாள்.

...நகுல் கேட்டான்.

"திட்டம் நிறைவேறியதும் பணத்தை வாங்கிட்டு நீங்க உடனே கிளம்பிடணும். அதுக்கப்புறம் என்னையோ நகுலையோ சந்திக்கிற முயற்சியில் ஈடுபடக்கூடாது."

'சரி' என்கிற மாதிரி லீனாவும் வின்சென்ட்டும் தலைகளையாட்ட, சர்வர் ஐஸ்கிரீம் கிண்ணங்களோடு வந்தான். சாப்பிட்ட தட்டுக்களை எடுத்துவிட்டு ஐஸ்கிரீ கிண்ணங்களை மேசையின் மே பரப்பிக்கொண்டிருந்த விநாடி -

நகுலின் பார்வை எதேச்சையாய் திரும்ப - பக்கவாட்டில் அந்த இன்ஸ்பெக்டர் தெரிந்தா அவனை நோக்கி மெல்ல வரவும் ஆரம்பித்தார்.

நகுல் இதயத்துக்குள் பிரளயம்.

"சா... சாம்பமூர்த்தி..."

"என்ன?"

"போ...போலீஸ்..."

அவனும் திடுக்கிட்டான். "எ... எங்கே?"

"வலதுபக்கம் பாரு."

சாம்பமூர்த்தி திரும்பி பார்ப்பதற்குள் - இன்ஸ்பெ நகுலை நெருங்கியிருந்தார். அவன் தோளில் தட்டி கேட்டார் இந்தியில்.

"நீ ஆட்டோ கேரேஜ் நகுல்தானே?"

"ஆ...ஆமா... சார்..."



"டி.எல்.ஐ.6734 போலீஸ் ஜீப்பை சர்வீசுக்கு ட்டிருந்தோம்... சர்வீஸ் முடிஞ்சு வண்டி டியாயிடுச்சா...?"

நகுலுக்கு இயல்பாய் மூச்சு வந்தது. "அதுவா... ர்...! இன்னும் இரண்டு நாள் ஆயிடும்... வண்டியில் றைய டிரபுள் இருக்கு..."

"நாளைக்கு மறுநாள் வண்டி கிடைச்சுடுமா..."

"கண்டிப்பா... கிடைச்சுடும் சார்..."

இன்ஸ்பெக்டர் நகர்ந்து போக - சாம்பமூர்த்தி மாய் பெருமூச்சுவிட்டு நெஞ்சை நீவிக்கொண்டான். கொஞ்ச நேரத்துல அடிவயிறெல்லாம் கதிகலங்கி பாயிடுச்சு..."

## 14

மறுநாள் காலை எட்டு மணி. நகலின் அறை.

வெல்வெட் துணியின் மேல் பரப்பப்பட்டிருந்த னோரு வைரங்களுக்கு முன்பாக லீனா ட்கார்ந்திருக்க - சுற்றிலும் இடதுகையில் நீர் நிரம்பிய ளரை வைத்துக்கொண்டு - ஒரு வாய் தண்ணீரை ட்டுக்கு கொடுத்து - ஒவ்வொரு வைரமாய் விழுங்கி தாண்டைக்கு இடது பக்கமாய் கையை அழுத்தி ழுத்தி அடக்கிக் கொண்டாள்.

"முடிஞ்சது..." சிரித்தாள்.

நகுல் கேட்டான்.

"ஒண்ணும் கஷ்டமாயில்லையே...?"

"என்ன கஷ்டம்...? இன்னும் அம்பது வைரம் இருந்தாலும் விழுங்கலாம்... பிரச்சினை இல்லை...!"

"கிளம்பலாமா...?"

"ம்..."

எல்லோரும் அறைன[illegible] பூட்டிக்கொண்டு வெளியே வந்தார்கள். தெரு முனைக்குப் போய் - ஒரு அம்பாசிட டாக்சியைப் பிடித்து - நாற்பது நிமிட நேரம் பயண செய்து - விமான நிலையத்தைத் தொட்டார்கள்.

விமான நிலையத்தில் [illegible] குறைவாக இருந்தது கையில் ஆளுக்கொரு [illegible]சோடு - நான்கு பேரு நிதான நடையில் நடந்தார்கள். நகுல் சொன்னான் "மிசஸ் லீனா... இனிமே[illegible] நீங்க ஜாக்கிரதைய இருக்கணும், செக்கி[illegible]னுக்குள் போனது நெர்வஸ் ஆயிடாதீங்க. [illegible]யவரைக்கும் இயல்ப இருங்க... நீங்க வேர்த[illegible]டு... பயப்படற மாதி பேசினால்... கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு சந்தேக வந்துடும்."

லீனா புன்னகைத்தாள்.

"உங்களுக்கு ... அதைப் பத்தின கவலை வேண்டாம்... என் கணவரைக் காட்டிலும் நான்தா தைரியசாலி... கஸ்டம்ஸ் அதிகாரிகளை வியர்க்கா முகத்தோடு சமாளிப்பேன். "காத்திருந்த பயணிகளோ நின்று - செக்கிங் கேபின்களை நெருங்கினார்கள்



டிக்கெட்டுகளை சோதித்துப் பார்த்தபின் - கஸ்டம்ஸ் அதிகாரிகள் - வரிசையில் நின்ற ஒவ்வொருவரையும் - பக்கத்திலிருந்த அறைக்கு கூட்டிப் போனார்கள்.

முதலில் வின்சென்ட். பிறகு சாம்பமூர்த்தி. பின் நகுல். கடைசியாய் லீனா... உள்ளே போனாள்.

இரு பெண் கஸ்டம்ஸ் அதிகாரிகள் அவளை சோதித்தார்கள். சேலையை களையச் சொன்னார்கள். களைந்தாள்.

ஒருத்தி வியந்தாள்.

"உங்களுக்கு அழகான உடம்பு..."

லீனா புன்னகைத்தாள். "நன்றி..."

"இடுப்பை எப்படி... சதை போடாமல் கச்சிதமாய் வைத்திருக்கிறீர்கள்?"

"எல்லாம்... பயிற்சிதான்..."

"உங்களுக்கு குழந்தை...?"

"இன்னும்... இல்லை..."

"உடம்பைப் பார்த்தாலே... தெரிகிறது... சேலையை உடுத்திக் கொள்ளுங்கள்..."

லீனா பரபரவென்று சேலையை உடுத்திக் கொண்டாள். "சோதனை அவ்வளவுதானா...?"

"அவ்வளவுதான்... நீங்கள் போகலாம்..."

வெளியே வந்த லீனா - தனக்காக காத்திருந்த மூன்று பேரையும் பார்த்து கண்ணைச் சிமிட்டினாள்.

"போலாமா...?"

"ஏதாவது பிரச்சினையா...?"

"ஒன்றுமில்லை..."

ரன்வேயில் நின்றிருந்த விமானத்தை நோக்கி நடந்தார்கள். நகுல் நெஞ்சை நீவிக்கொண்டான். "எப்படியோ திட்டத்தின் முதல் கட்டத்தை தாண்டிவிட்டோம்..."

"அடுத்தபடியாய் சென்னை விமான நிலைய கஸ்டம்ஸ் அதிகாரிகளை சமாளிக்க வேண்டும். டெல்லியைக் காட்டிலும் சென்னையில் கெடுபிடி அதிகம்..."

லீனா தோள்களை குலுக்கினாள்.

"எந்த கெடுபிடியையும் சமாளிக்க நானாயிற்று..."

"இந்த துணிச்சல் இருந்தால் போதும்..."

சாம்பமூர்த்தி சொல்லி முடிக்கவில்லை. பின்பக்கம் அந்த குரல் கேட்டது.

"மிசஸ் லீனா வின்சென்ட்..."

லீனா திரும்பினாள்.

விமான நிலையத்தைச் சேர்ந்த அந்த சிப்பந்தி நின்றிருந்தான். ஆங்கிலத்தில் சொன்னான். "செக்கிங் காபினுக்கு உங்களை மறுபடியும் கூப்பிடுகிறார்கள்."

அந்த ஒரு விநாடியில் - நான்கு பேரின் முகங்களும் வெளுவாய் மாறிப் போயிற்று.

# 15

லீனா அந்த சிப்பந்தியை பின்தொடர்ந்து - மறுபடியும் செக்கிங் கேபினுக்குள் நுழைவதற்குள் வியர்த்துப் போனாள். கர்ச்சீப்பால் முகத்தை ஒற்றிக் கொண்டே. அந்தப் பெண் கஸ்டம்ஸ் அதிகாரியின் முன்னால் போய் நின்றாள்.

அந்த அதிகாரி புன்னகைத்தாள்.

"இவ்வளவு மறதி உங்களுக்கு இருக்கக்கூடாது மிசஸ் லீனா."

"என்ன சொல்கிறீர்கள்?"

"பர்சை மறந்துவிட்டு போய்விட்டீர்களே? ஜாக்கெட் அணியும்போது கவனிக்க வில்லையா?"

"சாரி."

"இந்தாருங்கள் உங்கள் பர்ஸ்..." கையில் வைத்திருந்த அந்த சிறிய பர்சை நீட்டினாள்.

"நன்றி."

"பணம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்."

லீனா பார்த்துவிட்டு தலையாட்டினாள். "சரியாய் இருக்கிறது."

மறுபடியும் நன்றி சொல்லிவிட்டு. வெளியே வந்தாள் லீனா. உடம்பு வியர்ப்பது நின்றிருந்தது. கலவர முகங்களோடு நின்றிருந்த வின்சென்ட். நகுல்.

சாம்பமூர்த்தியை நெருங்கியதும் புன்னகைத்தாள்.

"வாங்க போகலாம்."

"என்னாச்சு?"

"சர்சை மறந்து வைச்சுட்டு வந்துட்டேன். அதை திருப்பித் தர்றதுக்காகத்தான் கூப்பிட்டாங்க."

"வேற ஏதாவது சந்தேகப்படும்படியா ஒண்ணும் கேக்கலையே லீனா?" வின்செண்ட் கவலையாய் கேட்டான்.

"எதுவுமே கேக்கலை."

விமானத்தை நெருங்கினார்கள். படிகளில் ஏறி உள்ளே நுழைந்து இருக்கை எண்களை விமான பணிப்பெண்கள் காட்ட, உட்கார்ந்தார்கள்.

சரியாய் பத்து மணிக்கு விமானம் புறப்பட்டது. நாக்பூர் விமான நிலையத்தில் இறங்கி, இரண்டொரு பயணிகளை உதிர்த்துவிட்டு மறுபடியும் 12.30க்கு விமானம் புறப்பட்டபோதுதான், லீனா அவஸ்தையாய் நெளிந்தாள். நெஞ்சை நீவி விட்டுக்கொண்டு சிரமமாய் மூச்சுவிட்டாள்.

வின்செண்ட் கேட்டான்.

"என்ன லீனா?"

"நெஞ்சை என்னவோ பண்ணுதுங்க. குடிக்க கொஞ்சம் தண்ணி வேணும்."

வின்செண்ட் விமான பணிப்பெண்ணை கூப்பிட்டு,



தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, லீனாவை குடிக்க வைத்தான். நகுலும் சாம்பமூர்த்தியும் அவளைப் பார்த்தார்கள்.

"லீனா, உங்களுக்கு என்ன பண்ணுது?"

அவள் மெதுவாய் பேசினாள். "நெஞ்சை அடைச்சு அடைச்சு வருது. விழுங்கியிருக்கிற வைரங்கள் தன் சுயரூபத்தை காட்டுதுன்னு நினைக்கிறேன்."

"நோ... நோ... காரணம் அதுவா இருக்க முடியாது. வைரத்தை பொடி செய்து விழுங்கினால்தான் அந்த நெஞ்சடைப்பு வரும். உயிருக்கும் ஆபத்து. ஆனால் இது அப்படியில்லை. நீங்க விழுங்கற கண்ணாடிச் சில்களைக் காட்டிலும் இது ஆபத்து இல்லாதது."

லீனா கண் சொருகினாள்.

"என்னால நெஞ்சடைப்பை தாங்கிக்க முடியலை. பாத்ரூம் போய் அந்த வைரங்களை வெளியே எடுத்துவிடட்டுமா?"

"சென்னை போய்ச் சேருகிறத வரைக்கும் பொறுத்துக்க முடியாதா?" நகுலும், சாம்பமூர்த்தியும் கெஞ்சும் குரலில் கேட்க, வின்செண்ட் லீனாவை தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

"இனி ரெண்டு மணி நேர பயணம் தான். வலியை கஷ்டப்பட்டு பொறுத்துக்கோ, லீனா."

சரியென்று தலையாட்டிய லீனா, கண்களை சோர்வாய் மூடிக்கொண்டாள். விமானம்

ஆகாயத்தையே அரைக்கிற மாதிரி போய்க் கொண்டிருந்தது.

## 16

போலீஸ் ஸ்டேஷன்.

டெலிபோன் ஒலித்ததும், இன்ஸ்பெக்டர் திவாரி விசாரித்துக்கொண்டிருந்த ஒரு பிக்பாக்கெட் பேர்வழியை விட்டு, மேசைக்கு வந்து ரிசீவரை எடுத்தார்.

"அலோ..."

"இன்ஸ்பெக்டர் மிஸ்டர் திவாரி?"

"ஆமாம்."

"நான் டாக்டர் வாகீசன் பேசறேன்."

"என்ன டாக்டர்...?"

"கல்பகா... கொலை செய்யப்பட்டது சம்பந்தமான... விசாரணை எதுவரையில் இருக்குது...?"

"கிணற்றில் போட்ட கல்... விசாரணையை மேற்கொண்டு நடத்த முடியாத அளவுக்கு ஸ்தம்பிதம் ஏற்பட்டிருக்கு... டாக்டர்..."

"பத்து நிமிடத்துக்கு முந்தி எனக்கு... ஒரு தகவல் கிடைச்சது இன்ஸ்பெக்டர்... அந்தத் தகவல் உங்க கேசுக்கு உகயோகப்படும்னா பாருங்க..."

"என்ன தகவல்...?"



"நான் வழக்கமா கணபத் ரோட்டில் இருக்கிற... துர்க்கையம்மன் கோயிலுக்கு போயிட்டுதான் ஆஸ்பத்திரிக்கு வருவேன். தினமும் கோயிலுக்கு போறதினாலே... கோயில் குருக்கள் எனக்க ரொம்பவும் பழக்கம்... குருக்களும் தமிழ்நாட்டுக்காரர்தான்... இன்னிக்கு சாமி தரிசனம் பண்ணிட்டு - கொஞ்சம் ஓய்வா - உட்கார்ந்தபோது - குருக்கள் என்கிட்டே வந்தார். கல்பகா தமிழ்நாட்டு பெண்ணானதினாலே... அவளைப் பத்தி என்கிட்டே பேச ஆரம்பிச்சார். கல்பகா ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் இந்த கோயிலுக்கு வருவாளாம். 'நகுல்' என்கிற பேருக்கு அர்ச்சனை பண்ணுவாளாம்... அந்த நகுல் யாருன்னு குருக்கள் ஒருதடவை கேட்டப்ப... எனக்கு வேண்டியவர்ன்னு சொல்லியிருக்கா..."

"பேர் என்ன சொன்னீங்க... நகுலா..."

"ஆமா..."

"அவள் குடும்பத்துல யாரும் அந்தப் பேரில் இல்லையே...?"

"இல்லை..."

"கோயில் குருக்கள் வேற என்ன சொன்னார்...?"

"அவர் சொன்ன விஷயமே இவ்வளவுதான். கல்பகா கொலையானதை பேப்பரில் படிச்சு பார்த்திருக்கார் குருக்கள். நாங்க எல்லாருமே தமிழ்நாட்டானதாலே... என்கிட்ட அந்தப் பெண்ணைப் பத்தி பேசியிருக்கார்..."

"அந்த குருக்களோட பேரென்ன...?"

"பாலகணேச குருக்கள்..."

"உங்க தகவலுக்கு ரொம்ப நன்றி டாக்டர்..." - சொல்லி டெலிபோன் இணைப்பை துண்டித்துக் கொண்டவர் - இடதுகையால் டெலிபோன் டைரக்டரியைப் புரட்டி - ஒரு நம்பரை பொறுக்கிக் கொண்டார்.

டயலைச் சுழற்றிவிட்டு பேசினார்.

"அலோ... டெல்லி தமிழர்கள் சங்கமா...?"

"ஆமா..."

"சாந்தி செரிக் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இன்ஸ்பெக்டர் திவாரி பேசறேன்...! நீங்க பேசறது யாரு...?"

"சங்க செயலாளர் லிங்கமூர்த்தி..."

"மிஸ்டர் லிங்கமூர்த்தி எனக்கொரு தகவல் வேணு:..."

"கேளுங்க சார்..."

"உங்க சங்கத்தில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள்?"

"அய்யாயிரத்து சொச்சம் பேர் இருக்காங்க சார்..."

"நகுல் என்கிற பேரில்... யாராவது உறுப்பினர் இருக்காங்களா...?"

"நகுல்...?"



"ஆமாம்..."

"ஒரு நிமிடம் லைனல இருங்க சார்... சொல்றேன்..."

இன்ஸ்பெக்டர் திவாரி காத்திருந்தார். அந்த நிமிடம் முடிவதற்குள்ளாகவே... லிங்கமூர்த்தி பேசினார்.

"நகுல் என்கிற பேரில் யாருமே இல்லை சார்... வேணும்ன்னா எங்க சங்க உறுப்பினர்கள்கிட்டே விசாரிச்சு சொல்றேன்..."

இன்ஸ்பெக்டர் திவாரி ஏமாற்றமாய் ரிசீவரை வைத்தார்.

## 17

விமானம் ஒரு ராட்சசப் பறவையாய் பறந்து கொண்டிருக்க - லீனா வலியால் துடித்து பற்களைக் கடித்தாள். வியர்வை பொங்கும் முகத்தோடு - கணவனின் காதருகே கிசுகிசுத்தாள்.

"ஏ... என்னங்க...?"

"ம்..."

"என்னால இந்த வலியை தாங்க முடியலை..."

"இன்னும் ஒரு மணி நேரம்தான்... சென்னை ந்துடும்..."

"முடியாதுங்க... அதுக்குள்ளே நான் செத்துடுவேன் போலிருக்கு..."

"ஒண்ணும் ஆகாது... தைரியமா... இரு..."

விமானப் பணிப் பெண் அருகில் வந்தாள். "உங்கள் மனைவி ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறார்கள். உடல் நலம் சரியில்லையா...?"

"லேசாய் நெஞ்சுவலி..."

"டாக்டரைக் கூப்பிடட்டுமா...? பிரயாணிகளிலேயே ஒரு டாக்டர் இருக்கிறார்..."

"வேண்டாம்... இப்போது குணமாகிவிடுவாள்..."

"வலியால் மிகவும் துடிக்கிறார்களே...? மாத்திரை ஏதாவது கொடுத்தீர்களா...?"

"இல்லை..."

"அப்படியானால் டாக்டரைக் கூப்பிடுவதுதான் நல்லது..." - சொன்ன விமானப் பெண் முன்வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு டாக்டரை போய் அழைத்து வந்தாள்.

வயதான லை நரைத்த அந்த டாக்டர் வர - வின்செண்ட் தன் இருக்கையை காலி செய்து பார்த்துக் கொடுக்க - அவர் அதில் உட்கார்ந்து - லீனாவை சோதித்தார்.

நகுல், சாமபழூர்த்தி, வின்செண்ட் மூன்று பேரும் - டாக்டரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க - அவர் இரண்டு நிமிட நேரம் சோதித்துவிட்டு - நிமிர்ந்தார்.

"இந்தப் பெண்ணுக்கு கணவர் யார்...?"

"நான்தான்..." வின்செண்ட் அவரை ஏறிட்டான்.

"இதற்கு முன்னால்... இதுமாதிரி நெஞ்சுவலி



வந்ததுண்டா...?"

"இல்லை டாக்டர்..."

"இரத்த அழுத்தம் எவ்வளவு?"

"நார்மல்..."

"விமானத்தில் பயணப் படுவதற்கு முன் என்ன சாப்பிட்டார்கள்?"

"வழக்கமான காலை உணவு... வெண்ணெய் தடவின இரண்டு ரொட்டித் துண்டு... ஆம்லெட்... ஒரு கப் பால்..."

டாக்டர் தன் கன்னத்தை கவலையாய் தேய்த்தபடி சொன்னார். "இது மாரடைப்பு போலத்தான் தெரியுது. என்னிடம் உள்ள ஒரு மாத்திரையைத் தருகிறேன்... அதை சாப்பிட்டால் இன்னும் ஒரு மணி நேரத்திற்கு தாக்குபிடிக்கலாம்... சென்னை போய் சேர்ந்ததும் - உடனடியாய் ஒரு நல்ல ஆஸ்பத்திரியில் சேர்த்து - சிகிச்சை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம்..."

சொன்ன டாக்டர் தன் இருக்கைக்குப் போய் - ப்ரீப்கேசை திறந்து - காப்ஸ்யூல் ஒன்றை எடுத்துவந்து கொடுத்தார். விமானப் பணிப்பெண் நீர் நிரம்பிய தம்ளரை கொண்டு வந்து நீட்ட - வாங்கி மாத்திரையை விழுங்கினாள்.

## 18

விமானம் சென்னையை நெருங்கிக் கொண்டிருந்தது. அறிவிப்பு ஒலிபெருக்கியில் வந்தது.

"விமானம் சென்னை விமான நிலைய - ஓடுதளத்தில் இறங்கக்கூடிய தயார் நிலையில் உள்ளது. பயணிகள் பெல்ட்களை அணிந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள்."

வின்சென்ட் லீனாவுக்கு பெல்ட்டை அணிவித்துக் கொண்டே கேட்டான்... "இப்ப எப்படியிருக்கு லீனா...?"

"வ... வலி குறைஞ்சிருக்கு... ஆனால் மூச்சுவிட முடியலை. .நெஞ்சுக்குள்ளே ஏதோ கல்லு மாதிரி அடைச்சிருக்கு..."

"ஆஸ்பத்திரிக்குப் போய் சிகிச்சை எடுத்தால் சரியா போயிடும்..."

விமானம் தாழ்ந்து ஓடுதளத்தில் இறங்குவது தெரிந்தது. விமானப் பணிப்பெண் அருகில் வந்தாள்.

"மிசஸ் லீனா! உங்களால் நடந்து போக முடியுமா...?"

"மு...டி...யு...ம்..."

"நடப்பதற்கு கஷ்டமாக இருக்குமென்றால் சொல்லுங்கள்... வேறு ஏற்பாடு செய்துவிடலாம்..."

"வேண்டாம்... என்னால் நடக்க முடியும்..."

விமானம் நின்றது.

பயணிகள் இறங்க ஆரம்பித்தார்கள். வின்சென்ட்டின் அணைப்பில் - லீனா மெதுவாய் படிகளில் இறங்கி - கஸ்டம்ஸ் சோதனைகளை சீக்கிரமாய் முடித்துக் கொண்டு - விமான நிலையத்திற்கு வெளியே வந்து - ஒரு டாக்சியை பிடித்தார்கள்.

சாம்பமூர்த்தியின் பங்களாவை நோக்கி டாக்சி



போயிற்று. வின்சென்ட் நகுலிடம் கிசுகிசுப்பான குரலில் சொன்னான்.

"முதல்ல லீனாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் சிகிச்சை எடுக்கணும்... அவள் நிலைமையைப் பார்த்தா பயமா இருக்கு..."

"எந்த பயமும் வேண்டியதில்லை... பங்களாவுக்கு போனதும் - சாம்பமூர்த்தியின் குடும்ப டாக்டரே வந்து பார்ப்பார்..."

லீனா வின்சென்ட்டின் அணைப்பில் கண் சொருகி - சற்று வேகவேகமாய் மூச்சிரைத்தாள்.

கார் இருபது நிமிடங்களை பயணத்தில் கரைந்து - பெசன்ட் நகரில் இருந்த சாம்பமூர்த்தியின் பங்களாவைத் தொட்டது. இறங்கி டாக்சியை அனுப்பிவிட்டு உள்ளே போனார்கள். எதிர்பட்ட ஒரு வேலையாளிடம் சாம்பமூர்த்தி சொன்னான்.

"நம்ப டாக்டருக்கு போன் பண்ணி உடனே வரச்சொல்லு..."

"சரிங்கய்யா..." அவன் போன் இருந்த திசையை நோக்கி ஓட - சாம்பமூர்த்தி ஹாலைக் கடந்து உள்ளேயிருந்த ஒரு அறைக்குக் கூட்டிப் போனான். .சி.யை ஆன் செய்துவிட்டு - வின்சென்ட்டுக்கு ட்டிலைக் காட்டினான்.

"லீனாவை அதில் படுக்க வையுங்க... டாக்டர் இப்ப ந்துடுவார்..."

வின்சென்ட் லீனாவை மெதுவாய் நடத்திப் போய் -

கட்டிலில் படுக்க வைத்தான். மூச்சிரைப்பு இன்னமும் அதே மாதிரி இருந்தது. நகுல் அவளிடம் குனிந்தான். "லீனா... உங்களால இப்ப... அந்த வைரங்களை வெளியே கொண்டுவர முடியுமா...?"

"முடியாது" - என்கிற மாதிரி தலையை ஆட்டினாள்.

"கொஞ்சம் முயற்சி பண்ணி பாருங்களேன்."

வின்சென்ட் கோபமாய் நகுலிடம் திரும்பினான். "அவளே நெஞ்சுவலின்னு துடிச்சிட்டிருக்கா... வலி இருக்கும்போது எப்படி அவளாலே... விக்கல் எடுத்து... எடுத்து... ஒவ்வொரு வைரமா வெளியே கொண்டுட்டு வர முடியும். அவள் குணமாகிற வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரு நகுல்..."

வேலையாள் உள்ளே வந்தான்.

"என்ன... முத்தப்பா... டாக்டர் வர்றேன்னு சொன்னாரா...?"

"டாக்டர் வீட்ல இல்லீங்கய்யா... எங்கியோ வெளியே போயிருக்காராம்..."

"ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணி பார்த்தியா...?"

"பண்ணிப் பார்த்தேங்க... டாக்டர் அங்கேயும் இல்லை... எப்ப வந்தாலும்... உடனே புறப்பட்டு இங்க வரச்சொல்லியிருக்கேன்ய்யா..."

"சரி...நீ...போ...! யார் என்னை தேடிட்டு வந்தாலும்... இல்லேன்னு சொல்லி அனுப்பிடு..."

"சரிங்கய்யா...".

வேலையாள் வெளியேறுகிறவரைக்கும் காத்திருந்த



வின்சென்ட் சாம்பமூர்த்தியிடம் திரும்பினான். "உங்க டாக்டர் வந்து பார்க்கிறதுக்குள்ளே... என்னோட லீனாவுக்கு ஏதாவது ஆயிடும் போலிருக்கு... இங்கே பக்கத்தில் இருக்கிற ஆஸ்பத்திரி ஏதாவதுக்கு கொண்டு போயிடலாமா...?"

"பதட்டப்படாதீங்க வின்சென்ட்... லீனாவை வேற ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனா பிரச்னை... வரும்..."

"என்ன பிரச்சினை...?"

"டாக்டர்கள் லீனாவை இன்டென்சிங் வார்டுக்கு கொண்டுபோய் ஸ்கேன் பண்ணிப் பார்ப்பாங்க... அப்படி ஸ்கேன் பண்ணி பார்க்கும்போது... கழுத்துப் பகுதியில் இருக்கிற வைரங்கள்... ஸ்கேனுக்கு கட்டுப்படலாம்..."

"லீனாவுக்கு... சாதாரண மாரடைப்பு... அதுக்காக கிச்சையத்தான் கொடுப்பாங்களே தவிர... அவளை ஸ்கேன் எடுக்க வாய்ப்பே இல்லை..."

"ஆஸ்பத்திரிக்குப் போயிட்டா டாக்டர்கள் எதையும் சய்வாங்க... அப்படி அவங்க செய்யும்போது... நாம தையும் மறுக்க முடியாது... என்னோட குடும்ப டாக்டர் ப்படியும் கொஞ்ச நேரத்துல வந்துடுவார்... அவர் நதும்..."

சாம்பமூர்த்தி சொல்லிக் கொண்டிருக்கும் போதே - னாவுக்கு மூச்சு வேகமாய் இறைத்தது.

கணகள் நிலை குத்தி சொருகியது.

வின்சென்ட் அவளருகே ஓடினான்.

"லீனா... லீனா..."

"ஹஸ்... ஹஸ்... ஹஸ்..." லீனாவுக்கு மார்பு தூக்கி தூக்கி போட்டது. உடம்பின் இடதுபாகம் ஒரு மாதிரியாய் வெட்டிக் கொண்டது.

"லீ... லீனா..."

வின்செண்ட் அவள் கன்னத்தை பயமாய் தட்டிக் கொண்டிருக்கும் போதே - அவள் நினைவிழந்து விட்டாள்.

## 19

வின்செண்ட் சீற்றமாய் திரும்பினான். வெறிபிடித்தவன் போல் நகுலையும், சாம்பமூர்த்தியையும் பார்த்து கத்தினான்.

"அடப்பாவிகளா! என்னோட லீனாவை கொன்னுடுவீங்க போலிருக்கே. எனக்கு உங்க பணம் வேண்டாம்! என்... லீனா... எனக்கு... உயிரோடு வேணும். அவளுக்கு ஏதாவது ஒண்ணு ஆனால், நான் சும்மா இருக்கமாட்டேன். மரியாதையா இப்ப அவளை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப் போறீங்களா, இல்லை நான் கொலைகாரனா மாறவா?"

நகுல் அவன் தோளைத் தட்டினான்.

"வின்செண்ட்! ஏன் அப்படி கத்தறே? நாம இப்போ எந்த மாதிரியான நிலைமையில் இருக்கோம்ன்னு உனக்குப் புரியுதா? லீனாவை ஆஸ்பத்திரியில் சேர்க்கிறதோ, சிகிச்சை எடுக்கிறதோ பெரிய காரியமில்லை. எந்த ஆஸ்பத்திரிக்கும் கொண்டுபோய் பத்து நிமிடத்துல சேர்த்துடலாம். ஆனால் அதன் மூலமா



ஏதாவது பிரச்சினை கிளம்பி, லீனா வைரங்களை விழுங்கியிருக்கிற விஷயம் வெளியே தெரிஞ்சா நிலைமை என்னாகும்?"

"என்ன ஆனாலும் சரி, அதைப்பற்றி எனக்கு கவலையில்லை! லீனாவை உடனடியா கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் சேர்த்தாகணும்."

"வின்செண்ட்! நிதானமா இரு!"

"என்னால முடியாது! நீங்க லீனாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலைன்னா பரவாயில்லை. நான் கொண்டுட்டு போறேன்" சொன்ன வின்செண்ட் ஆவேசமாய் ஓடிப்போய் - கட்டிலில் இருந்த லீனாவை இரண்டு கைகளாலும் தூக்க முயன்றான்.

நகுல் ஓடிப்போய் வின்செண்ட்டின் சட்டைக் காலரைப் பிடித்தான்.

"வின்செண்ட் முட்டாள்தனமா எதையாவது பண்ணி போலீஸ்ல எல்லாரும் மாட்டிக்கும்படியா செஞ்சுடாதே!"

"நீ என்ன சொன்னாலும் சரி, நான் கேக்க மாட்டேன். என் லீனா எனக்கு உயிரோடு வேணும். உங்க டாக்டர் வர்ற வரைக்கும் அவள் நிச்சயமா, உயிரோடு இருக்கமாட்டா."

கத்தியபடி லீனாவை அள்ளிக்கொண்டு திரும்பிய வின்செண்ட், சாம்பமூர்த்தி அவசர அவசரமாய் மேசையின் இழுப்பறையைத் திறந்து, ரிவால்வரை எடுப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

சாம்பமூர்த்தி ரிவால்வரை அசைப்படியே புன்னகைத்தான். "மரியாதையா லீனாவை கட்டில்ல போடு."

வின்சென்ட் பின்வாங்கினான்.

"ம்... போடு..."

"ராஸ்கல்ஸ்! உங்களை நம்பினதுக்கு..."

"பேசாதே! லீனாவை கட்டில்ல போடு. அடம்பிடிச்சா, ரெண்டு பேரையும் சுட்டுத்தள்ள வேண்டியிருக்கும்."

வின்சென்ட் நகுலைப் பார்த்தான். "டேய்... என்னடா இது? உன் நண்பன் துப்பாக்கியை எடுத்து காட்டுறான்..."

நகுல் சிரித்தான்.

"அவன் வேற என்ன பண்ணுவான்? நல்லதனமா சொல்லிப் பார்த்தான். நீ கேட்கலை. அந்த ரிவால்வருக்கும் நீ பயப்படலைன்னா, அவன் என்ன வேணுமின்னாலும் செய்வான். ஏன்னா எங்களுக்கு வேண்டியது உன் பெண்டாட்டியோட உயிரோ, உன்னோட உயிரோ இல்லை. அந்த பதினோரு வைரங்கள்."

இரண்டு பேரையும் வெறித்துப் பார்த்தான் வின்சென்ட். நாசித் துவாரங்கள் கோபத்தில் விம்மின.

"ம்... லீனாவை கட்டில்ல போடு."

அவன் மெல்ல கிடத்தினான்.

"அப்படி சுவரோரமாய் போய் நில்லு."

நின்றான்.

"என் குடும்ப டாக்டர் வந்து சிகிச்சை ஆரம்பிக்கிற வரைக்கும் வாய் பேசமாமே கம்னு இருக்கணும். எங்களுக்கு அனுசரணையா இருந்தால், உயிர்ச் சேதம்



இல்லாமே பத்து லட்ச ரூபாய் உன் கைக்கு வரும். இல்லேன்னா, என் ரிவால்வர்ல இருக்கிற ரெண்டு தோட்டாக்களை நான் வீணாக்க வேண்டிவரும்."

"ராஸ்கல்..."

வின்சென்ட் கத்திக்கொண்டே - எதிர்பாராத ஒரு விநாடியில் சாம்பமூர்த்தியின் மேல் பாய்ந்தான். ஆனால் . சாம்பமூர்த்தி விலகிக் கொண்டு, வின்சென்ட்டின் அடிவயிற்றில் உதைக்க, அவன் மல்லாந்து விழுந்தான்.

நகுல் அவனுடைய நெஞ்சின் மேல் தன் பூட்ஸ் அணிந்த காலை வைத்தான். "வின்சென்ட்! இனிமே நாங்க எங்க சுயரூபத்தை காட்டித்தான் ஆகணும். நன்றியோடு இருக்கிற வரைக்கும்தான் நாய். அதுக்கு வெறிபிடிச்சா, சுட்டுக்கொல்ல வேண்டியதுதான். இனி வன்முறைதான். என்ன பண்ணப்போறோம் தெரியுமா? உனக்கொரு தோட்டாவை கொடுத்து பிணமாக்கிட்டு, கையோடு கையா உன் உயிருக்கு உயிரான பொண்டாட்டியையும் கர்த்தர்கிட்டே அனுப்பிட்டு, எங்களுக்கு வேண்டிய வைரங்களை - அவள் அழகான கழுத்தை அறுத்து சுலபமா எடுத்துகிட்டு, புருசன் - பெஞ்சாதி ரெண்டு பேரோடு உடம்பையும் ஒரு கோணிப் பையில் போட்டுக் கட்டி, ஏதாவது ஒரு புறம்போக்கு நிலத்துக்கு கொண்டுபோய், எட்டடி ஆழத்துல குழி தோண்டி புதைச்சுட போறோம்."

"ந...கு...ல்..."

"சாரி. இனிமே இங்கே நம்ம நட்புக்கு மதிப்பில்லை.

உனக்கு-முதல் தோட்டா. லீனாவுக்கு இரண்டாவது தோட்டா! ஆமென்!" சொன்ன நகுல், சாம்பமூர்த்தியின் கையிலிருந்த ரிவால்வரை வாங்கிக்கொண்டான். கீழே விழுந்து கிடந்த வின்சென்ட்டை நோக்கி ரிவால்வரின் மூக்கைத் தாழ்த்தினான்.

அடுத்த விநாடி -

"டுமீல்...ல்...ல்..."

அறை வாசலின் பக்கத்திலிருந்து தோட்டா ஒன்று சீறி, நகுலின் கையிலிருந்த ரிவால்வரை சிதறடித்தது.

இருவரும் திரும்பினார்கள்.

புகை கக்கும் துப்பாக்கியோடு ஒரு இன்ஸ்பெக்டர். ஒரு சப்-இன்ஸ்பெக்டர். இரண்டு கான்ஸ்டபிள்களுக்கு நடுவில் - வாயில் இரத்தத்தோடு வேலையாள் முத்தப்பா கைகள் பின்னுக்குக் கட்டப்பட்ட நிலையில் தெரிந்தான். போலீஸ் கைங்கர்யம் முகத்தில் ஆங்காங்கே இரத்தம் புடைப்புகளாய் தெரிந்தன.

## 20

இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் உள்ளே வந்தார்கள். நகுலும், சாம்பமூர்த்தியும் மிரட்சியாய் பின்வாங்க, வின்சென்ட் எழுந்து இன்ஸ்பெக்டரிடம் வந்தான்.

"சார்... இவங்க... என் மனைவியை..."

இன்ஸ்பெக்டர் கையமர்த்தினார். "ஒரு நிமிடம்! இதில் யார் சாம்பமூர்த்தி. யார் நகுல்?"



வின்சென்ட் அடையாளம் காட்டினான்.

"சரி. நீ யார்?"

"சார் என் பேர் வின்சென்ட். அந்தக் கட்டிலில் படுத்திருக்கிறவள் என்னோட மனைவி. பேரு - லீனா" என்று ஆரம்பித்தவன் ஒரே நிமிடத்தில் எல்லா விஷயங்களையும் மூச்சுவிடாமல் சொல்ல, இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டார்:

"கடவுளே! இப்ப அந்தப் பெண்ணோட கழுத்துல வைரங்கள் இருக்கா?"

"ஆமா சார்."

"கான்ஸ்டபிள்!"

"சார்..."

"அந்தப் பெண்ணை உடனடியா நம்ம ஜீப்ல வைச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் அட்மிட் பண்ணுங்க. வின்சென்ட்! நீங்களும் கூட போங்க."

லீனாவை தூக்கிக்கொண்டு இரண்டு கான்ஸ்டபிள்கள் ஜீப்புக்கு போக, வின்சென்ட் வேகவேகமாய் பின்தொடர்ந்தான்.

இன்ஸ்பெக்டர் நகுலையும் சாம்பமூர்த்தியையும் ஏறிட்டார். "நாங்க இங்கே இப்படி வந்தோம்ன்னு உங்க இரண்டு பேருக்கும் ஆச்சரியமாயிருக்கும். முதல்ல அந்த ஆச்சரியத்தை போக்கிடறேன். டெல்லி சாந்தி சேரிக் போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் திவாரி. ஒரு மணி நேரத்துக்கு முந்திதான் சென்னை போலீஸை தொடர்பு கொண்டு பேசினார். அவர் சொன்ன விபரம்

இதுதான். குபேர் வீட்டு வைரங்கள் திருட்டு போனது சம்பந்தமாகவும். கல்பகா என்கிற பெண் கொலையுண்டது சம்பந்தமாகவும், இன்ஸ்பெக்டர் திவாரி விசாரணையை மேற்கொண்டிருந்தபோது. டாக்டர் வாகீசன் மூலமாக கல்பகா ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் கணபதி ரோட்டில் இருக்கும் துர்க்கையம்மன் கோயிலுக்கு வந்து 'நகுல்' என்கிற பேருக்கு அர்ச்சனை செய்யறதா தகவல் கிடைச்சிருக்கு. யார் அ;நத நகுல்ன்னு தெரிஞ்சிக்கிறதுக்காக இன்ஸ்பெக்டர் திவாரி டெல்லி தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொண்டு பேசியிருக்கார். சங்க செயலாளர் லிங்கமூர்த்தி. 'நகுல்' என்கிற பெயரில் யாரும் இல்லைன்னு சொன்னவர். ரெண்டு மணி நேரம் கழிச்சு மறுபடியும் திவாரிக்கு போன் பண்ணியிருக்கார். சங்க மெம்பர்கள் சில பேர்கிட்டே நகுலைப் பற்றி கேட்டதாகவும் அதில் ஒருவர் - துர்க்காராம் லே-அவுட் டெலிகிராம் ஆபீசில் எஸ்.டி.டி. கவுண்டர் கிளார்க்காக பணிபுரிகிற சண்முகராஜன் என்கிற தமிழ்நாட்டு ஆசாமி நகுலைப் பற்றி சில விபரங்கள் கொடுத்திருக்கார். நான்கைந்து நாட்களுக்கு முன் - நகுல் டெலிகிராம் ஆபீசுக்கு வந்து எஸ்.டி.டி. ஸ்லிப்பில் பெயரை பதிவு செய்து. சென்னைக்கு டெலிபோன் பேசியதாகவும் அப்போது அவர் கண்ணாடிக் கூண்டுக்குள்ளிருந்து தமிழ் மொழியில் பேசியதால் - அந்த பேச்சை ஆர்வமாய் கவனித்ததாகவும். பேச்சில் நடுவில் சாம்பமூர்த்தி என்கிற பெயர் அடிபட்டதாகவும்



சொல்லியிருக்கிறார். அந்த டெலிபோன் பேச்சு 'மறைபொருளாக' இருந்ததென்றும் சொல்லியிருக்கிறார். உடனே திவாரி சண்முகராஜனிடம் பேசியிருக்கிறார். நான்கைந்து நாட்களுக்கு முன் - நகுல் எழுதி கொடுத்த எஸ்.டி.டி. ஸ்லிப்பை தேடிப்பிடித்து. அதில் எழுதியிருந்த சென்னை போன் நம்பரை குறித்துக்கொண்டு. எங்களோடு தொடர்பு கொண்டவர் - எல்லா விபரங்களையும் சொன்னார். சாம்பமூர்த்தியின் வீட்டுக்கு திடீரென்று போய் சோதனையிடும்படி சொன்னார். டெலிபோன் நம்பர் மூலமாக வீட்டு முகவரியை எக்சேஞ்சில் கேட்டு தெரிந்துகொண்டு. நேராய் இங்கே வந்தோம். உங்கள் வீட்டு வேலைக்காரன் விசுவாசமாய் எங்களைத் தடுத்தான். அவனைக் கொஞ்சம் சேதமாக்கி தள்ளிக்கொண்டு உள்ளே வந்தோம். நாங்கள் எதிர்பார்க்காத காட்சி. வின்சென்ட்டை நகுல் சுட முயல நாங்கள் முந்திக் கொண்டோம்."

நீளமாய் பேசி முடித்த இன்ஸ்பெக்டர். சப்-இன்ஸ்பெக்டரிடம் திரும்பினார். "என்ன மிஸ்டர் கிருஷ்ணராஜ் எல்லாத்தையும் சரியா சொன்னேனோ?"

"சரியா சொல்லிட்டீங்க சார்."

"அப்படின்னா இரண்டு அண்ணன்களுக்கும் காப்பை மாட்டுங்க."

மாட்டினார்.

வின்சென்ட்டையும், லீனாவையும் இந்த வழக்கில்

அப்ரூவர்களாக மாற்றி வழக்கை வெற்றிகரமாய் கோர்ட்டுக்கு கொண்டு போகலாம் என்கிற சந்தோசத்தில் இன்ஸ்பெக்டர் அவர்கள் இருவரையும் தள்ளிக்கொண்டு போனார்.

ரோட்டில் சேர்ந்துவிட்ட கும்பல், நகுலையும் சாம்பமூர்த்தியையும் குப்பை காகிதங்களை பார்க்கிற மாதிரி பார்த்தது.

(முற்றும்)


# திகில் & த்ரில்

மலர்: 3

இதழ்: 2

வெளியிடுபவர் - ஆசிரியர் :
எம்.எஸ்.முருகன்

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்
56/2. ஸ்ரீராம்பேட்டை தெரு. சி.ஐ.டி. நகர்
நந்தனம், சென்னை - 600 035.
போன். 044 - 24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'Thikil & Thril' Novel Monthly Owner,
Publisher & Editor M.S. Murugan,
Published at:
New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,
Nandanam, Chennai - 600 035. Phone : 98405 14529